# இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி

எஸ்.எம். ஹனிபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி

12/-

சட்டத்திரணி அல்-ஹாஜ்
எஸ்.எம் ஹனிபா

தமிழ் மன்றம்
குல்ஹின்ன, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Islaamiya Ilakkiya Valarchchi

(History of Islamic Tamil Literature)


by:

Al-Haj S. M. HANIFFA B. A. (Cey.)

*Attorney-at-Law*



(C) Copyright Reserved



First Published in April 1982



வகுப்பு எண் உ 297.09

வரவு எண் 18385



*Eleventh Publication of*

TAMIL MANRAM

GALHINNA, KANDY.


*Other Books by the Author :*

UTHTHAMA THOOZAR (TAMIL)

UTHUM NABITHUMANNO (SINHALESE)

THE GREAT SON (ENGLISH)

UTHTHAMAR UWISE (TAMIL)


*PRINTED AT :*

FAIRPRINT

65, PRINCE'S GATE,

COLOMBO-12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

هَلْ جَزَآءُ الْإِحْسَانِ إِلَّا الْإِحْسَانُ ۝

நன்மைக்கு, நன்மையேயன்றி (வேறு) கூலியுண்டா?
(அல்குர்ஆன் 55 : 60)

**

# பிரார்த்தனை

— சாரணபாஸ்கரன் —

தோளொடுக்கும் பெற்றோரை இழந்தபோதும்
துணைகொடுக்கும் சுற்றத்தார் பிரிந்தபோதும்
வாளெடுக்கும் கொடும்பகைவர் சூழ்ந்தபோதும்
வறியவரில் வறியவராய் வாழ்ந்தபோதும்
ஆளொடுக்கும் பசிப்பிணியே அடைந்தபோதும்
அல்லாஹ்வே நின்னுணை மறவாத்தூதர்
தாளெடுக்கும் சமுதாயம் தாழ்ந்திடாமல்
தலைநிமிர்ந்து வாழ்ந்திட்வே தயைசெய்வாயே!

பாருலக மாந்தரிலே ஏற்றத்தாழ்வைப்
படைக்கின்ற சிறுமதியை உடைத்தெறிந்தே
ஈருலக வாழ்வுக்கும் உரியோனுன
இணையற்ற நின்பெயரை இகத்தில்நாட்டச்
சீருடலைச் சிதைக்கின்ற எதிர்ப்புமேற்ற
திருநபியின் அரும்வழியில் திரண்டுநிற்போர்
ஆறுதலைப் பெறுவதற்கு அலைதல்நன்றே
அல்லாஹ்வே நின்னருளைச் சொரிந்துகாப்பாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
என்ற அடிப்படையில், பரந்த
மனப்பான்மையும் தூரநோக்கும் கொண்டு
ஐம்பது வயதிற்குள் ஐம்பது நூல்கள்
எழுதி வெளியிட்ட முதுபெரும் அறிஞர்

**ஆர். பி. எம். கனி**

அவர்களுக்கு இந்நூல்

**ச ம ர் ப் ப ண ம்**

---

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய நூலைத் தாங்கள் பிரசுரிப்பது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் இலக்கிய வரலாறு படிக்கின்ற பல்கலைக்கழக மாணவர்க்கும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர மாணவர்க்கும் இந்நூல் மிகப் பயனுள்ளதாயிருக்கும்.

கலாநிதி அ. சண்முகதாஸ், Ph. D.
மொழி, பண்பாட்டுத் துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஸ்லாமிய
இலக்கிய
வரலாறு
முதன்முதலில்
தமிழில்
எழுதி அரும்
பணிபுரிந்த
பெருந்தகை

●

மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய இலக்கியப் பேராசிரியர், அல்ஹாஜ் கலாநிதி ம. மு. உவைஸ் உவந்தளித்த

# அணிந்துரை

தயவுசெய்து ... த்திருக்கவும் ... ஏற்படுத்த



பள்ளிப் பருவம் முதல், எழுத்துத் துறையில் ஆர்வமிக்கவராயிருந்து வருகின்ற ஜனாப் எஸ். எம். ஹனிபா அவர்கள், பள்ளிப் படிப்பை முடிப்பதற்குள் ''சமுதாயம்'' என்ற சஞ்சிகையை வெளியிட்டு, ஒரு பெரும் சாதனை புரிந்தவர். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் அவருக்கு இருந்த ஈடுபாடு காரணமாக எம். ஏ. தேர்வுக்காக நான் எழுதிய ''முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு'' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலை, தனது சொந்தச் செலவிலேயே வெளியிட்டவர். இது நிகழ்ந்து, கால் நூற்றூண்டுக்கு மேலாகிவிட்டது. இன்று கூட, இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திலுள்ள ஆர்வமும், கொண்ட ஈடுபாடும் இந் நூலை வெளியிடுவதற்கான தூண்டு கோலாய் அமைந்துள்ளன.

பள்ளிப் பருவம் முதல் பல்கலைக்கழக பட்டப் படிப்பு வரை, தமிழை ஒரு பாடமாகக் கற்றுத் தேர்ந்ததிலிருந்து, இத்தகைய ஒரு நூலை இயற்றுவதற்கு, அவருக்குள்ள தகமை தெற்றெனப் புலனுகிறது. பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்தில் பல்கலைக்கழக மாணவரால் வெளியிடப்பட்ட பல்வேறு சஞ்சிகைகளில் ஆசிரியராகப் பணி புரிந்து அவற்றைச் சிறந்த முறையில் வெளியிட்டமை இத்துறையில் அவருக்கு இருந்த ஆற்றலை கோடிட்டுக் காட்டியுள்ளது. பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறிய பின்னரும், வெகு சனத் தொடர்புச் சாதனங்களில் பல்வேறு துறைகளில் தொடர்ந்தும் பணி புரிந்து, அவர் அனுபவசாலியாகத் திகழ்கின்றூர்.

இத்தகைய ஒரு நூலை அவர் இக்கால கட்டத்தில் வெளியிடுவது சாலப் பொருந்தும்; அவரது முயற்சி வெல்க.

ம. மு. உவைஸ்

'மர்கஸி'
ஹெனமுல்லை,
பாணந்துறை.
1-3-1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ்வே துணை !

நடக்கிலும் நீதுணை என்னுயி ரோடி நடுநடுங்கிக்
கிடக்கிலும் நீதுணை அப்பால் கபனைக் கிழித்துச்சுற்றி
மடக்கிலும் நீதுணை எல்லோருங் கூடி மணலறையுள்
அடக்கிலும் நீதுணை அல்லாவுன் பக்கல் அடைக்கலமே!

— ''அடைக்கல மாலை''யில்
கீழக்கரை, அப்துல் காதிறுப் புலவர்

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் துணையாலே, எனது மற்ெறாரு 'பிள்ளை' இன்று உருப் பெற்று விட்டது. இத்துடன், ஐந்து ''குழந்தை''களுக்குத் தந்தையாகிவிட்ட மனத்திருப்தி பெறுகிறேன்.

கற்றறிந்தவர்கள் மாத்திரமல்லாமல், சாதாரண மக்களும் குறிப்பாக இளவயதினரான மாணவ, மாணவிகள் எமது இலக்கியச் செல்வங்களைப் பற்றி ஓரளவு அறிவேனும் பெறுவதற்கு உதவும் வகையில் இந்நூலை அமைத்துள்ளேன். மிக எளிய நடையில், அத்தியாவசியமான தகவல்களை மாத்திரமே இதில் சேர்த்துள்ளேன். மிக விரிவாக எழுதினால் எனது நோக்கம் நிறைவேறமாட்டாது என்பதனால், பழைய புதிய இலக்கியங்களைப் பற்றி ஆழமான ஆராய்ச்சி விவரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலைப் படிக்கின்றவர்களில் நாலு பேர், இலக்கிய ஆர்வம் பெற்று, இலக்கிய வளர்ச்சிக்குப் பணி புரிய முன் வருவார்களானால், இதனை எழுதியதற்கு நல்ல பயன் கிடைத்து விட்டதாக நினைத்துப் பூரிப்படைவேன்.

இனிய மொழியில், அணிந்துரை தந்த பேராசிரியர் டாக்டர் ம. மு. உவைஸ் அவர்களுக்கு, எனது இதயம் கனிந்த நன்றி.

நம்பிக்கை கொண்டவர்க்கு, எல்லா
நிலையிலும் அல்லாஹ்வே துணை

27/1, Beach Road,
Mount-Lavinia.
15-3-1982.

எஸ். எம். ஹனிபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| | பிரார்த்தனே | ... | ... | 3 |
| | அணிந்துரை | ... | ... | 5 |
| | அல்லாஹ்வே துணை | ... | ... | 7 |
| 1. | ஆல்போல் வளர்க ஆர்வம் | ... | ... | 9 |
| 2. | முஸ்லிம் தமிழ் இலக்கியம் என்ன நிலையிலிருக்கிறது? | ... | ... | 12 |
| 3. | முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டு | | ... | 15 |
| 4. | இஸ்லாமிய இலக்கியம் | ... | ... | 22 |
| 5. | சிறந்த வளர்ச்சி | ... | ... | 29 |
| 6. | பேராதனையில் தமிழ் ஆராய்ச்சி | ... | ... | 60 |
| 7. | நிகரில்லாத அரும்பணி | ... | ... | 64 |
| 8. | முஸ்லிம் மக்கள் கீழ் நாட்டுக்கு வந்த வரலாறு | ... | ... | 68 |
| 9. | கல்ஹின்ன — கலாநிதி ம. மு. உவைஸ் | ... | ... | 74 |
| | உத்தமர் உவைஸ் — கலாநிதி அ. சண்முகதாஸ் | ... | ... | 78 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் கொழும்பு

# 1

# ஆல்போல்.... வளர்க ஆர்வம்

அண்மைக் காலத்தில், இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் பலதரப்பட்டவர்களும் ஆர்வம் காட்டி வருகின்றனர். என்று முதல் இந்த மறுமலர்ச்சி ஆரம்பமாகியது? இதற்கு வித்திட்டவர் யார்? என்பன போன்ற கேள்விகளுக்கு பதில் காண்பது தான் இன்று அவசியமாகிறது.

தமிழுக்கும், இஸ்லாத்திற்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே தொடர்பு இருந்து வருகிறது. கிறிஸ்து (ஈஸா நபி) சகாப்தம் ஆரம்பமாவதற்கு முன்பிருந்தே அராபிய வர்த்தகருக்கும், தென்னிந்தியா, இலங்கை, சீனு போன்ற கிழைத்தேயங்களுக்குமிடையிலான தொடர்பு ஆரம்பமாகி விட்டது என்பதனை வரலாற்ருசிரியர் நிறுவியுள்ளனர். அன்று தொட்டு, தமிழ் மொழியை அராபிய வர்த்தகர் பயின்று வந்துள்ளனர் என்பது நிச்சயம். தென்னிந்திய, இலங்கை வர்த்தகம் பெரும்பாலும் தமிழ் தெரிந்தவர்களின் பொறுப்பிலேயேஇருந்தபடியால்தான், தமிழ் கற்பது அவசியமாகியது.

எனினும், நாம் இன்று அறிந்துள்ள வரையில், சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்புதான் இஸ்லாமியப் புலவர்கள் தமிழில் நூல் இயற்ற ஆரம்பித்துள்ளனர். அதற்கு முன்னரும் நூல்கள் இயற்றப்பட்டிருக்கலாம். ஆனுல் அவை இன்றுவரை கிடைக்கவில்லை. இந்தப்பணி, படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்து, இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் மங்கிப் பின்னர். இந்த நூற்ருண்டின் மத்தியில் இருந்து மறுமலர்ச்சிபெற்று வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946 ம் ஆண்டில்தான், இஸ்லாமிய இலக்கிய மறுமலர்ச்சிக்கான வித்திடப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராயிருந்த முத்தமிழ் வித்தகர், சுவாமி விபுலானந்தர்தான் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாயிருந்தார். இது பலருக்கும் ஆச்சரியத்தைத் தரும். ஆனால், இது உண்மை; முற்றிலும் உண்மை. இலங்கையின் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை ஆரம்பிப்பதற்கு அனுமதி கிடைத்துவிட்ட ஒருவர், நிதியுதவி பெறும் நோக்கத்துடன் புலமைப்பரிசில் வழங்கப்படுவதற்கான பரீட்சையொன்றிற்கும் தோற்றி, வெற்றி கண்டார். அவருக்கு நேர்முகப்பரீட்சை நடைபெற்றது. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராயிருந்த ஆங்கிலேயரான சட்டத்துறை நிபுணர் ஸர் ஐவர் ஜெனிங்ஸ், தலைமையில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. அப்பொழுதுதான், சுவாமி விபுலானந்தர் 'இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய செந்தமிழ்க் காப்பியம் ஒன்றின் பெயரைக் கூறலாமா?' என்று கேட்டார். இஸ்லாமியக் காப்பியம் என்றால் சீறாப்புராணம் ஒன்றுதான் என்ற கருத்து எங்கும் நிலவிய காலமது. கேள்வி கேட்கப்பட்டவர் இது பற்றி அறிந்திருந்தும், பதில் சொல்வதற்கு அவருக்குத் துணிவு வரவில்லை. ஏனெனில், அப்போதைய இஸ்லாமிய இலக்கிய அறிவு அவ்வளவு குறைவாயிருந்தது. "சீறாப்புராணம் ஒரு காப்பியந்தானா?" என்ற சந்தேகம் அவருக்கு எழுந்தது.

நேர்முகப் பரீட்சை முடிந்து விட்டபோதிலும், கேள்வி கேட்கப்பட்டவரான பாணந்துறை, ஹேனமுல்லையைச் சேர்ந்த எம். எம். உவைஸ் அவர்களின் மனதில் ஏற்பட்ட தாக்கம், நீங்கவில்லை. "தமிழ்ப் பெரியார் ஒருவர் கேட்ட இஸ்லாமிய இலக்கியம் சம்பந்தமான கேள்விக்கு முஸ்லிம் ஆகிய என்னால் பதில் கூற முடியாமற் போய்விட்டதே" என்ற எண்ணம் அவரை வாட்டிக் கொண்டிருந்தது. மூன்றாண்டுகளில் பட்டப் படிப்பை முடித்து விட்டு, இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் இறங்கினார். (இது பற்றிய விபரங்கள் "உத்தமர் உவைஸ்" என்ற அவரின் வாழ்க்கை வரலாற்று நூலில் இடம் பெற்றுள்ளன). பல்கலைக்கழக நியதிப்படி, முதுமாணி (எம். ஏ.) பட்டம் பெறுவதற்கான நூலை ஆங்கிலத்தில் அவர் எழுதினார். "முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு" என்பது அந்த நூலின் பெயர். அவரின் கலைமாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பி. ஏ.) பட்டப் படிப்பின் போதே 1948 ம் ஆண்டில் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் இறையடி சேர்ந்தார். அவரின் பின், தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்ட கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்களும், அப்பொழுது தமிழ் விரிவுரையாளராயிருந்த கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களும் உவைஸ் அவர்களுக்கு, ஆராய்ச்சிக்கான எல்லா ஊக்கத்தையும் கொடுத்து வந்தனர்.

1951 ம் ஆண்டின் முற்பகுதியில் எழுதிமுடிக்கப்பட்ட ஆங்கில நூல், 1953 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில்தான் வெளியுலகைக் கண்டது. (இது பற்றிய வரலாறு, இந்நூலின் பிற்பகுதியில், "நிகரில்லாத அரும்பணி" என்ற தலைப்பிலுள்ள கட்டுரையிலிருக்கிறது.) அதுவரை, இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய விபரங்கள் ஆங்கிலத்திலும் வெளிவந்ததில்லை, தமிழிலும் வெளியாகவில்லை.

தமிழில், முதன் முதலில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப்பற்றி விரிவாக எழுதியவர் கலாநிதி சு. வித்தியானந்தன். அவர் எழுதி முதன் முதலில் அச்சாகிய நூல் "இலக்கியத் தென்றல்" 1953 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், கல்ஹின்னைத் தமிழ் மன்றப் பிரசுரமாக வெளிவந்தது. "இந்நூலிலுள்ள, இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு என்னும் பகுதி இதுவரை தமிழில் எழுதப்பட்ட இலக்கிய வரலாற்று நூல்களில் இடம்பெறாததொன்று" என இந்நூலின் பதிப்பாளர் உரை, கூறுகிறது.

1946 ம் ஆண்டில், சுவாமி விபுலானந்தர் இட்ட வித்து செடியாகி, மரமாகி 1951 ம் ஆண்டில் அரும்பிய போதிலும் 1953 ம் ஆண்டில்தான் கனி கிடைத்தது. அந்த ஆண்டு ஆரம்பத்தில், நான் முழுப் பொறுப்பாக இருந்து, இலங்கை பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் ஆண்டு சஞ்சிகையான "இஸ்லாமிகா ஸெய்லானிகா" வெளிவந்தது. "முஸ்லிம் தமிழ் இலக்கியம் இன்று என்ன நிலையிலிருக்கிறது.?" என்ற கேள்வி தலைப்பாய் அமையப் பெற்றுள்ள சிறிய கட்டுரையை அச்சஞ்சிகையில் நான் எழுதினேன். பழைய இலக்கியங்களை மறு பிரசுரம் செய்யும் பணியையும், குலாம் காதிறு நாவலர் செய்த குவாலீர்க் கலம்பகத்தைப் பிரசுரித்து, ஆரம்பித்து வைத்தேன். அந்தக் கட்டுரையுடன், இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி பற்றிய எனது இந்தக்கண்ணோட்டம் ஆரம்பமாகிறது.

முஸ்லிம் பெருங்குடி மக்களிடம் மாத்திரமல்லாது, ஏனைய தமிழறிந்தவர்கள் மத்தியிலும் இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பற்றிய ஆர்வம் பெருகி வருகிறது. ஆல் போல் வளர்க, இந்த ஆர்வம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொழும்பு
நூ. க.
கொழும்பு

# 2 முஸ்லிம் தமிழ் இலக்கியம் என்ன நிலையிலிருக்கிறது?

இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் தாய்மொழியைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் இந் நாட்களில், தமிழிலுள்ள இஸ்லாமிய இலக்கியத்தைப் பற்றி நினைவுறுத்துவது பொருத்தமாயிருக்கும். 'முஸ்லிம் தமிழ் இலக்கியம் இன்று என்ன நிலையிலிருக்கிறது' என்ற கேள்வியைக் கேட்டதும், பிறருக்கல்ல, முஸ்லிம்களுக்கே அது அதிர்ச்சியுண்டு பண்ணும். 'அவ்வளவு பெரிய மகுடம் கொடுத்தழைக்க, முஸ்லிம்கள் என்ன இலக்கியத்தை எழுதிவிட்டார்கள்! சீருப்புராணம், மஸ்தான் சாகிபுப் பெரியார் பாடல்கள் போன்ற இரண்டொரு நூல்கள்தானே தமிழில் முஸ்லிம்களால் எழுதப்பட்ட நூல்கள்' என்பதே பலரிடம் இன்றுள்ள அபிப்பிராயம்; அது தவறு.

முஸ்லிம் புலவர்களால் எழுதப்பட்ட நூல்கள் பலவகை. ஐநூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள், தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் சமீப காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் எழுதிய நூல்கள் பல இறந்து விட்டபோதிலும், இன்னும், சில எங்கள் மத்தியில் இருக்கின்றன. அவற்றைப் பற்றி நாங்கள் நன்றாக அறிந்து கொள்ளவில்லை. அதற்குக் காரணம், அந்த நூல்கள் கவனிப்பாரற்று வீட்டு அலமாரிகளில் இருப்பதுவும், அவற்றைப்பற்றி இன்றுள்ள முஸ்லிம்

---

(இலங்கைப் பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸ் 1953ம் ஆண்டின் ஆரம்பத்தில் பிரசுரித்த ''இஸ்லாமிகா ஸெய்லானிகா'' சஞ்சிகையில் இருந்து இக் கட்டுரை எடுக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகைகளாவது முஸ்லிம்களிடையே ஓர் விழிப்புணர்ச்சியை உண்டாக்காமலிருப்பதுவுமேயாம். இந்த நிலை நீண்டு இருத்தலாகாது, இருக்கவும் முடியாது. இனி, முஸ்லிம்கள் தமது தமிழ் இலக்கியங்களைத் திருப்பிப் பார்த்து, விரும்பிப் படிக்கும் நிலை வெகு விரைவில் ஏற்பட வேண்டும்.

முஸ்லிம் புலவர்களால் என்னென்ன நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன, இன்னின்ன வகையில், இன்னின்ன புலவர்கள் நூல்கள் எழுதியிருக்கின்றார்களென்பதையெல்லாம் நன்றாக விவரித்து "முஸ்லிம் தமிழ் இலக்கியம்'' என்ற ஒரு நூலை ம. மு. உவைஸ், எம். ஏ. அவர்கள் எழுதியிருப்பது எல்லோரும் உவகை கொள்ளக் கூடியவொன்றாகும். மிகச் சிரமப்பட்டு, அவர் நன்றாக ஆராய்ந்து இந்நூலை எழுதியிருக்கிறார். இந்த முஸ்லிம் இலக்கிய வரலாறு ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் அச்சாகவுமில்லை. இந்த நூல் அண்மையில் அச்சேறுவதோடு, தமிழ் மொழி பெயர்ப்பொன்றும் வருமென்று எதிர்பார்க்க முடியும். பெரும்பாலும் தென்னிந்திய முஸ்லிம் புலவர்களாலேயே எழுதப்பட்ட தமிழ் இலக்கியத்தின் வரலாற்றை ஓர் இலங்கையர் எழுதியிருப்பது தென்னிந்திய முஸ்லிம்களுக்கு அதிசயமாய்த்தான் இருக்கும். இதைக் கண்ட பின்னராவது, அவர்கள் தங்கள் மூதாதையர் தமிழ் இலக்கியச் சிருஷ்டியில் ஈடுபட்டதுபோல், இன்று இலைமறைகாயாய் மூலைமுடுக்குகளிலுள்ள நூல்களைத் தேடி வெளியிட முன் வருவார்களென்று நம்பலாம். முஸ்லிம்கள் வெளியிடும் நூல்கள் வழக்கமாக யானைவிலை, குதிரை விலையாய்த்தானிருக்கும். எனவே அவை, சாதாரண மக்களின் கைக்கெட்டுவது அருமை; அந்த நிலைமாறி 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கொள்கையைப் பின்பற்றி, முஸ்லிம் புலவர்களின் மாணிக்கம் போன்ற நூல்களைக் குறைந்த விலையில் விற்க முஸ்லிம் பிரசுரகர்த்தாக்கள் முன்வர வேண்டும்.

இலங்கையின் தென் மேற்குக் கடற்கரையிலுள்ள மக்கூன் என்னுமிடத்தில் சமீபகாலம் வரை வாழ்ந்து மறைந்த அப்துல் ஹமீதுப் புலவரவர்கள் சேர்த்து வைத்த நூல்களிலிருந்து எடுத்த 'குவாலீர்க் கலம்பகம்' என்ற நூல் இச்சஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகையில் பிரசுரிக்கப்படுகிறது. இதைப் பிரசுரிப்பதற்குத் தந்துதவிய புலவரவர்களின் புதல்வர் ஜனப் ஏ. எச். ஏ. அப்துல்லா அவர்களுக்கு முஸ்லிம்கள் அனைவரும் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்த நூலைக் கடைசியாக (அதுதான் முதல் முறையாகவும் இருக்கலாம்.) 1882-ல் பிரசுரித்திருக் கின்றதாகவே தற்பொழுது கிடைத்துள்ள பிரதியிலிருந்து அறியக்கிடக்கிறது. இந்த நூலுக்கும், இன்னும் இப்படிப் பலப் பல முஸ்லிம் தமிழ் இலக்கிய நூல்களுக்கும், தகுந்த உரை எழுதும் பணியில், குறிப்பாக முஸ்லிம்கள் ஈடுபட வேண்டும். தமிழில் அக்கறையுள்ள தமிழ் அறிஞர்களும் இச்சேவையில் கவனங் கொள்வார்களென்று எதிர்பார்க்க இடமுண்டு.

"குவாலீர்க் கலம்பகம்" எழுதியவர் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த குலாம் காதிர் நாவலர். அவர் அக்காலத்தில் நாகூர் தர்கா வித்வானய் இருந்தவர். இன்னும் பல நூல்கள் எழுதியிருக்கின்றார். அவற்றுள் பலரும் போற்றிப் புகழும் நூல் "புலவர் ஆற்றுப்படை" அதைத் தவிர, நாகூர்க் கலம்பகம், மதுரைக் கோவை, நாகூர்ப் புரா ணம், சீறாப்புராண வசனம், திருமணிமாலை வசனம் முதலி யன அவர் இயற்றிய சிறந்த நூல்கள். பாண்டித்துரைத் தேவர் ஆரம்பித்த மதுரைத் தமிழ்ச்சங்க (நாலாவது சங்க)ப் புலவர்களுள் இவரும் ஒருவர். ஆதிகாலத்திலிருந்த சங்கங் களில் கடைச் சங்க காலத்தின் மிகச்சிறந்த புலவரொருவ ராக நக்கீரர் கருதப்பட்டார். குலாம் காதிர் நாவலரை நாலாஞ் சங்க நக்கீரர் என்றழைத்தனர். "வன்னவெழிற் கீரன் போலழகெலா மொருங்கிலங்க" என்று அப்பொழுதைய தமிழ்ப் புலவரொருவர் அவரைப் புகழ்ந்து கூறுகிறார். இவ் வளவு புகழ் வாய்ந்த இந்தப் புலவர் எழுதிய நூல்களையும், பிற முஸ்லிம் புலவர்கள் எழுதியவற்றையும், குறிப்பாக பிற் கால முஸ்லிம்களும், பொதுவாய் தமிழ் தெரிந்த எல்லோரும் படித்தின்புறுவதற்காக வேண்டிப் பாதுகாப்பது எங்கள் கடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டு

முஸ்லிம் புலவர்கள் பலர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்திருக்கின்றனர். அவர்கள் இயற்றிய சிறந்த பல நூல்கள் இருக்கின்றன. ஆனால் இலைமறைகாய்கள் போன்றுதான் இந்நூல்கள் சமீபகாலம்வரை இருந்துள்ளன. அவற்றைப் பற்றி, தமிழ் கற்றோர் அறியாதவர்களாக இருந்தனர். சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தென்னிந்தியா, இலங்கை ஆகிய இடங்களைச் சேர்ந்த முஸ்லிம் புலவர்கள், இலக்கியச் சிறப்புத்தன்மைகள் அமைந்த பல நூல்களை இயற்றினர். புலவர்களின் பிற்சந்ததியினர் இந்நூல்களைப் பற்றி அறியாதிருந்ததற்குக் காரணம், நூல்களைப் பற்றியோ அவற்றை எழுதிய புலவர்களைப் பற்றியோ எதுவும் தெரியாமல் இருந்ததேயாகும். இன்ன இன்ன காலத்தில், இப்படி இப்படியான நூல்கள் வெளிவந்தன என்பதை எடுத்துக் கூறுகின்ற ஆராய்ச்சி நூல் ஒன்று சமீபகாலத்தில்தான் வெளியானது.

சீறாப்புராணம், மஸ்தான் சாஹிபு பாடல்கள் போன்ற இரண்டொரு நூல்கள் தான் முஸ்லிம்களால் தமிழில் எழுதப்பட்டன என்ற அபிப்பிராயம் ஒரு காலத்தில் நிலவியது. இஸ்லாமிய இலக்கிய நூல்களைப் பற்றிய ஆராய்ச்சி நூல் முதன்

---

**1970 ம் ஆண்டு மே மாதம், அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா மலேசியா வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் 1953 ஆம் ஆண்டில் வெளியானவுடன், பிறர் மாத்திர மல்ல, முஸ்லிம்களும் கூடத்தான் ஆச்சரியமடைந்தனர். முஸ்லிம் புலவர்கள் இவ்வளவு நூல்களை எழுதியிருக்கின் றனரா என்று பலர் அதிர்ச்சியுற்றுக் கேள்வியெழுப்பினர்.

பலவகையான நூல்களை முஸ்லிம் புலவர்கள் எழுதியிருக் கின்றனர். அவர்கள் எழுதிய நூல்களில் பல கிடைக்காமல் போய்விட்டபோதிலும் சில பிரதானமானவையேனும் இது வரை, இருக்கின்றன. இவற்றை புத்துயிர்பெறச் செய்கின்ற முயற்சிகள் இப்பொழுது தென்னிந்தியாவிலும், இலங்கை யிலும் நடந்து கொண்டிருக்கின்றன. தென்னிந்தியாவில் சீறாப் புராணம் புதிய பதிப்பு வெளிவந்திருக்கிறது. நாகூர் தர்கா வித்வானாக இருந்த குலாம் காதிறு நாவலரின் புலவராற்றுப் படை இலங்கையில் வெளியிடப்பட்டிருக்கின்றது. இது மாத் திரமல்லாமல், இலங்கையில் வருடாவருடம் நடைபெறுகின்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கான இஸ்லா மிய இலக்கிய பாடத்திற்கு, புதுகுஷ்ஷாம், குத்புநாயகம் போன்ற நூல்களின் சில பகுதிகளும் சீறாப்புராணத்தின் சில பிரிவுகளும் பாடப்புத்தகமாக பாவிக்கப்படவேண்டும் என கட்டாயமாக்கப்பட்டது. இக்காரணங்களினால், இஸ்லாமிய இலக்கியத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது.

முஸ்லிம்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டை சிறப் பாக எடுத்துக் கூறுகின்ற ஆங்கில நூல், இலங்கை மத்திய மாகாணத்தில் உள்ள கல்ஹின்னையில் இருக்கும் தமிழ் மன்றத் தால் வெளியிடப்பட்டது. இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழக பட்டதாரியொருவரின் முயற்சியால் பிரசுரமான இந் நூலை தற்பொழுது இலங்கையில் வித்தியோதய பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராக இருக்கும் எம். எம். உவைஸ் எழுதி னார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் எம். ஏ. பட்டம் பெற்றவர். இலக்கியத்துறையில் மிக ஈடுபாடு கொண்டவர். இலங்கை வானொலியில் இலக்கிய சம்பந்தமான எத்தனையோ பேச்சுக்களை நிகழ்த்தியுள்ள இவர், இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக தமிழ்த் தின சரிப் பத்திரிகைகளிலும் பல கட்டுரைகளை எழுதினார். இலங் கையில் வெளியாகும் சஞ்சிகை ஒவ்வொன்றிலும், இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள் இடம் பெறுமல் போவதில்லை. பல நூல்களை இயற்றியுள்ள ஜனுப் உவைஸ், இன்னும் தொடர்ந்து இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றிய கட்டுரைகள் எழுதிக்கொண்டேயிருக்கின்றுர். அவர் இயற்றிய Muslim Contribution to Tamil Literature என்ற ஆங்கில நூலை அனுசரித்து ''இஸ்லாமியத் தென்றல்'' என்ற தமிழ் நூல் 1961 ஆம் ஆண்டில் வெளியானது. கல்ஹின்னை, மணிக்குரல் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டிருக்கின்றது.

பெரும்பாலும் தென்னிந்திய முஸ்லிம் புலவர்களாலேயே எழுதப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களின் வரலாற்றை, ஒரு இலங்கையர் எழுதியிருப்பதில் இருந்து இலக்கியத்துறையில் எவ்வளவு கருத்தொற்றுமை இருக்கிறது எனக் கணிக்கலாம். உலகெலாம் எங்கள் தாயகமாகும் எனக் கருதும் புலவர்கள், பரந்த மனப்பான்மை கொண்டவர்கள். அவ்வளவு பரந்த எண்ணம் ஏற்பட்டதனுல்தான், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, சங்ககாலத்தில் வாழ்ந்த கணியன் பூங்குன்றன் என்ற புலவரும் கூட, எமக்கு எல்லாம் ஊர் எல்லோரும் சுற்றத்தவர் என்ற கருத்தில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடினுர்.

இஸ்லாமிய இலக்கியங்களுள் தலைசிறந்ததென சீறுப் புராணம் கருதப்படுகிறது. இந்நூல் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையைக் கவிதையில் எடுத்துக்கூறுகிறது. சீறத் என்ற அரபுச் சொல்லுக்கு வாழ்க்கை, வரலாறு என்பது கருத்து. அதில் இருந்து, சீறு என்ற பதம் தோன்றியிருக்கிறது. அத்துடன் தமிழ்ச் சொல்லாகிய புராணம் சேர்ந்து, நூலின் பெயர் சீறுப்புராணம் என அமைந்துள்ளது. இந்நூலை உமறுப் புலவர் இயற்றினுர். தென்னிந்தியாவில் உள்ள கீழக்கரையைச் சேர்ந்தவர் இவர். எட்டையபுரம் என்ற சமஸ்தானத்தின் வித்துவானுக இருந்த கடிகை முத்துப்புலவரிடம், இவர் கல்வி பயின்றுர். கடிகை முத்துப் புலவர் காலமானதன் பின்னர், உமறுப்புலவர் எட்டையபுர சமஸ்தான வித்துவானுனுர். சீதக்காதி வள்ளல், உமறுப் புலவர் ஆகிய இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதக்காதி வள்ளலின் வேண்டுகோளுக்கு இணங்க, உம றுப் புலவர் சீறுப்புராணத்தை இயற்றினர் என்று சொல்லப் படுகிறது. அரபு மொழியில் இருந்து முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களை, செய்கு சதகதுல்லா என்ற அறிஞர் உமறுக்கு எடுத்துக் கூறினர். அதனை அடிப் படையாக வைத்து அவர் சீறுப்புராணம் பாடினர். விலாதத் துக்காண்டம், நுபுவ்வத்துக்காண்டம், ஹிஜ்ரத்துக்காண்டம் என சீறுப்புராணம் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. விலாதத்து என்ருல் அரபியில் பிறப்பு என்பதைக் குறிக்கும். நபிகள் (ஸல்) அவர்களின் பிறப்பும், இளமைப்பருவமும் இந் தக்காண்டத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. 'நுபுவ்வா' என்ற அரபுச்சொல்லுக்குத் தீர்க்கதரிசனம் என்னும் பொருள் உண்டு. அந்த அரபுச்சொல்லில் இருந்துதான் நுபுவ்வத் வந்து இருக்கிறது. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நபித்துவம் பெற்றதைப்பற்றி சீறுவில் இரண்டாவது காண்டம் கூறுகிறது. மக்காவில் துன்புறுத்தப்பட்ட முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து மதினவுக்குப் போனர்கள். இதனை ஹிஜ்ரி எனப்படுகிறது. 'ஹிஜ்று' என்பதும் அரபுச் சொல்தான். ஹிஜ்ரியின் பின்னர், நபிகள் நாயகத்தின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைச் சீறுவின் கடைசிக்காண்டத்தில் உமறுப் புலவர் கூறியிருக்கின்ருர். ஹிஜ்ரி நிகழ்ச்சியில் இருந்துதான், இஸ்லா மிய வருடம் கணிக்கப்படுகிறது.

இஸ்லாமிய அடிப்படையில் எழுதப்பட்டுள்ள தமிழ் நூல் களில் சிறந்ததெனக் கணிக்கப்படுகின்ற சீறு, தமிழ் இலக் கியத்தில் பெரும் காப்பியங்கள் எனக் கூறப்படுகின்ற நூல் களின் தரத்தை ஒத்ததாக இருக்கிறது. முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முழுவதையும் சீறு கூறவில்லை. அவர் களின் மறைவைப்பற்றி, ஒன்றுமே இதில் குறிப்பிடப்பட வில்லை. மொத்தம் 5,027 பாடல்கள் கொண்ட சீறுப்புராணத் தில், 92 படலங்கள் அடங்கியிருக்கின்றன.

இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த இன்னொரு காப்பியம் புதுகுஷ்ஷாம். புதுவற் என்ருல் வெற்றிப்பிரவேசம் என்ற பொருள்படும். ஷாம் என்பது தற்பொழுது சிரியா என் றழைக்கப்படுகின்ற நாடாகும். ஆதலால் முஸ்லிம்கள் சிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் வெற்றியுடன் பிரவேசித்ததைப் பற்றி இந்த நூல் கூறுகிறது. இதில், நபிகள் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் கடைசிக்காலத்தைப்பற்றி, நிறைய அறியலாம்.

தென்னிந்தியாவின் காயல்பட்டனத்தைச் சேர்ந்த மகா வித்துவான் செய்யது அப்துல் காதிறு நயினர் லெப்பை ஆலிம் புலவர், இந்த நூலை இயற்றினர். நூலில் முஹம்மதிய்யா, ஸித்தீக்கியா, பாறூக்கிய்யா என்று மூன்று காண்டங்கள் உள்ளன. முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வரலாற்றில், கடைசிக்காலச் சம்பவங்களை முதல் காண்டம் கூறுகிறது. இரண்டாவது காண்டத்தில், முஸ்லிம் ஆட்சியின் முதல் கலீபாவாக இருந்த அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களின் வரலாறு இடம்பெற்றுள்ளது. மூன்ருவது காண்டம், இரண்டாம் கலீபாவான உமரே பாறூக் (ரலி) அவர்களின் காலத்தில் சிரியா நாடு முஸ்லிம் ஆட்சியின் ஒரு மாகாணமாக அமைந்த வரலாற்றைச் சொல்கிறது.

திருமணிமாலை என்ற நூலும் புதுகுஷ்ஷாம் ஆசிரியர் மகாவித்துவான் செய்யது அப்துல் காதிறு நயினர் லெப்பை ஆலிம் புலவர் அவர்களால் இயற்றப்பட்டதாகும். இந்நூல் இப்ருஹிம் நபி (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது. நாட்டு, நகர வர்ணனைகளின்போது, இப்ருஹிம் நபியின் நாடான சிரியாவின் இயற்கை அழகினை நூலாசிரியர் விளக்குகிருர்.

செய்யது அப்துல் காதிறு நயினர் லெப்பை ஆலிம் புலவர் இயற்றியுள்ள மற்ருெரு சிறுகாப்பியம் குதுபு நாயகம். முஹியித்தீன் புராணம் என்றும் இந்நூல் அழைக்கப்படுகிறது. 11-ஆம் நூற்ருண்டில் ஈராக் தேசத்தில் உள்ள ஜீலான் என்னும் இடத்தில் பிறந்து பக்தாத்தில் அரிய இஸ்லாமிய சேவை செய்த ஞானி முஹியித்தீன் ஆண்டகையைப் பற்றி, இந்நூல் கூறுகிறது. முஹியித்தீன் ஆண்டகையின் வரலாற்றைக் கூறும் பல காப்பியங்கள் இதே பெயருடன் வேறு பல புலவர்களாலும் இயற்றப்பட்டுள்ளன.

மதுரை மீசல் வண்ணக்களஞ்சியப்புலவர் இராசநாயகம் என்னும் காப்பியத்தை எழுதியுள்ளார். சுலைமான் (அலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் நபியின் வரலாற்றைக் கூறுகின்ற இந்நூலில் 46 படலங்கள் உள்ளன. இதில் 2, 140 பாடல்கள் இருக்கின்றன.

நாகூர்ப்புராணம், நாகூரில் அடங்கியுள்ள சாஹுல் ஹமீது ஆண்டகை அவர்களின் வரலாற்றைக் கூறுகிறது. நாகூர் தர்க்காவில் மகா வித்துவானக இருந்த குலாம் காதிறு நாவலர், இந்தக் காப்பியத்தை இயற்றியிருக்கின்றார். இவர் வேறு பல நூல்களையும் எழுதியிருக்கிறார்.

இஸ்லாமிய அடிப்படையில் அமைந்துள்ள காப்பியங்களைப்பற்றிப் பார்த்துவிட்டோம். ஆற்றுப்படை, அந்தாதி, அம்மானை, கலம்பகம் போன்ற பிரபந்தவகை நூல்கள் ஏசல், மாலை, திருப்புகழ், சிந்து, கும்மி, தாலாட்டு வகையிலான சிற்றிலக்கியங்கள் முதலியனவும் முஸ்லிம் புலவர்களால் எழுதப்பட்டுள்ளன. இஸ்லாமிய அடிப்படையில் அன்றி சமயத் தொடர்பற்ற நூல்களையும் முஸ்லிம் புலவர்கள் இயற்றியுள்ளனர். புலவராற்றுப் படை இதற்கு எடுத்துக் காட்டாகும்.

இஸ்லாமியர் மட்டுமின்றி பல்வேறு சமயத்தவரும் தமிழ் மொழியைப்பேணி வளர்ந்துவந்துள்ளனர். இப்பொழுதும் போற்றிப் பணிபுரிகின்றனர். சைவம், வைணவம், பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களின் அடிப்படைகளில் தமிழ் மொழியில் பல்வேறு நூல்கள் எழுந்துள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பெரும் காப்பியங்கள் சமண, பௌத்த, ஆசிரியர்களால் இயற்றப்பட்டன. அச்சமயங்களின் கருத்துக்களே இவ்விரு பெரும் காப்பியங்களிலும் பரந்து காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களின் தொடர்பால் தமிழில் தனியான நூல்கள், அகராதிகள், செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியன வெளியாகியுள்ளன. இஸ்லாமியப் புலவரின் சேவையால், பல கவிதை நூல்களும் வசன நூல்களும் தோன்றியுள்ளன.

இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த நூல்களில், அரபு மொழியில் உள்ள இஸ்லாமிய கிரந்தங்களின் கருத்துக்கள் தான் பெரும்பாலாக எடுத்தாளப்பட்டன. இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள், படித்துப் பயன் பெறவேண்டும் என்பதற்காகவும் பிற சமயத்தவர் படித்தால் இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளைத் தெரிந்து கொள்வதற்காகவுமேதான், சமய அடிப்படையில் முன்னைய நாட்களில் நூல்களை எழுதியிருக்க வேண்டும். நிச்சயமாக இவை இஸ்லாமியருக்குப் பயன்படக் கூடிய வகையிலேயே அமைந்துள்ளன. ஆதலால் முஸ்லிம் களின் மீது சுமத்தப்பட்டுள்ளது, பெரிய பொறுப்பு ஒன்றாகும். இந்த நூல்களைப் பாதுகாப்பதே அப்பெரும் கடமை. பழைய நூல்களைக் கருத்துடன் பதிப்பித்து, மலிவான விலையில் வெளி யிட்டு எல்லோரும் பயன்பெற வழிசெய்ய முஸ்லிம் ஸ்தாப னங்கள் முன்வரவேண்டும். இதனால், சமயத்திற்கும் அரும் பணி புரிந்து தமிழ் மொழி வளர்ச்சியையும் பேணி, எமது மூதாதையரின் விலைமதிக்க முடியாத இத்தகைய சிறந்த தமிழ் நூல்களைத் தேடி எடுத்து அரும்படைப்புக்களைப் பின் சந்ததியாரும் கண்டு பயனடைய வழிசெய்தவர்களாவோம். இவற்றைப் பதிப்பிக்க ஆவன செய்தல் அவசியமாகும்.

ஃ ஃ ஃ

---

இறையருட் கவிமணி பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம். ஏ. அவர்களின் கருத்து:

ஈரேழு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்களால் போற்றி வளர்க்கப்பெற்ற இஸ்லாமிய நெறி, விரைவிலேயே உலகத்தின் பெரும் பகுதிகளிற் பரவியது. அண்ணல் பெருமானார் அவர் களின் மறைவுக்குப் பின்னர், கால் நூற்றாண்டுக்குள் ளாகவே இஸ்லாமிய நெறி தென்னகத்திற் காலூன்றி விட்டதற்குத் தெளிவான ஆதாரங்கள் உள்ளன. அவ் வளவு பழங்காலத்திலேயே இந் நாட்டில் இஸ்லாமிய நெறி இடம் பெற்றிருந்தும், இன்றமிழ் இஸ்லாமிய இலக்கியங்கள் மிகப் பிற்பட்டே உருவாகியுள்ளன. இதற்குரிய காரணங்கள் ஆய்ந்து நோக்குதற்குரியன. ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து தோன் றிய முன்னூற்றிற்கும் அதிகமான புலவர்களின் நூற் கள் நமக்கு இன்று கிடைத்துள்ளன. இவை தவிர, மறைந்த ஏடுகளும், மறைக்கப்பட்ட ஏடுகளும், செல் லரித்த ஏடுகளும், நெருப்புக்கிரையான ஏடுகளும் பற் பல. இன்று கிடைத்துள்ள ஏடுகளைப் பற்றியும் பொது வாகத் தமிழகம் எதுவுமறியா நிலையிலுள்ளது... (அதிரை அஹ்மத் எழுதிய ''இஸ்லாமிய இலக்கியச் சிந்தனை''க்கு வழங்கிய முன்னுரையில்)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
கொழும்பு
நூ. ச.
சேகரம்பு

# 4 இஸ்லாமிய இலக்கியம்

இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற முஸ்லிம் புலவர்கள் எழுதியுள்ள நூல்களை இஸ்லாமிய இலக்கியம் என்றழைக்கிறோம். இந்நூல்களில், இஸ்லாம் சமய சம்பந்தமான கருத்துக்கள்தான் மேம்பட்டிருக்கும். தமிழ் மொழியைக் கற்றறிந்த முஸ்லிம்கள், தங்கள் சமயத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடனேயே இந்நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

சீறாப்புராணம், புதுகுஷ்ஷாம், திருமணிமாலை, குதுபுநாயகம், இராசநாயகம், நாகூர்ப்புராணம் என்ற காப்பியங்கள் இஸ்லாமிய இலக்கிய நூல்களாய் மிளிர்கின்றன. இவை தவிர, வேறு தமிழ் இலக்கிய முறைகளைப் பின் பற்றி, எழுதப்பட்ட நூல்களும் பலவுண்டு.

நாகூரில், தர்கா வித்துவானாயிருந்த குலாம் காதிறு நாவலர் பல நூல்களை எழுதியுள்ளார். மதுரையில் அமைந்திருந்த நான்காம் தமிழ்ச் சங்கத்தில் இவர் பிரபலமான புலவராய் விளங்கினார். நான்காம் சங்கத்தின் நக்கீரர் என்று அவர் புகழ்ந்துரைக்கப்பட்டார். ஆதிகாலத்தில் இருந்த சங்கங்

---

1970 ம் ஆண்டு மே மாதம், அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா, மலேசிய வானொலியில் நிகழ்த்திய இன்னுமொரு சொற்பொழிவு. அவர் எல்லாமாக நாலு சொற்பொழிவுகளை அந்தப் பிரயாணத்தின்போது, நிகழ்த்தினார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில், கடைச் சங்க காலத்தில் மிகச் சிறந்த புலவரொருவ ராக நக்கீரர் விளங்கினர். நான்காம் சங்கத்தின் தமிழ்ப் புலவரொருவர், "வன்னவெழிற் கீரன் போலமழ கெலா மொருங் கிலங்க" என்று குலாம் காதிறு நாவலரைப் புகழ்ந்து கூறு கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இவர், முஸ்லிம் புலவர்களுள் சிறந்தவர். நாகூர்ப்புராணம் என்ற காப்பியத்தைவிட, இருபதுக்கு மேற்பட்ட வேறு நூல் களையும் குலாம் காதிறு நாவலர் எழுதியுள்ளார். மதுரைக் கோவை, நாகூர்க்கலம்பகம், குவாலீர்க் கலம்பகம், திருமதி னுத்திரி பந்தாதி, சமுத்திரமாலை போன்ற நூல்களையும் இவர் எழுதினர். பினங்கிலிருந்து "வித்தியா விசாரிணி" எனும் பத்திரிகையையும் இவர் நடத்தினர்.

**புலவராற்றுப்படை** என்னும் நூல் இவர் எழுதிய ஆற்றுப் படை வகையினைச் சேர்ந்த நூலாகும். பரிசு பெற்ற ஒரு புலவர், இன்னொரு புலவருக்குப் பரிசு பெற மதுரைத்தமிழ்ச் சங்கத்துக்குப் போகும்படி வழிகாட்டுவதை இந்நூல் கூறுகி றது. தமிழ் நாட்டின் பழமையும், மதுரையின் பெருமையும் இதில் விவரிக்கப்பட்டுள்ளன. மதுரைக்குச் செல்லும் வழி, இடையில் கிடைக்கும் ஊர்திகள், தமிழ்சங்கத்தின் சிறப்பு, அங்கிருக்கின்ற புலவர்களின் பெருமை, சங்கத்தை நிறுவிய பாண்டித் துரைத் தேவரின் புகழ் போன்றனவெல்லாம் கற்பனையுடன் இந்நூலில் அமைந்துள்ளன.

புலவருக்குச் செல்ல வேண்டிய வழியைக் கூறும்பொழுது, பல இயற்கைக் காட்சிகளை எடுத்துக் கூறுகின்றார் பரிசு பெற்றுவிட்ட இப்புலவர். இயந்திரத்தையுடைய ஊர்தியில் செல்ல வேண்டும் என்பதைக்கூறி, அதனை விவரிக்கையில், இடியின் சத்தம் போன்ற ஒலியை எழுப்புகின்ற உருளைகள் நான்கு இருபக்கங்களிலும் உருளுவதாகவும், காட்டிலுள்ள கொள்ளி வாய்ப்பேயின் மூக்கைப் போன்று, புகைக்குகின்றது மான காற்றைப் போல வேகமாய் ஓடுகின்ற எந்திர ஊர்தி என புகைவண்டியைக் குறிப்பிடுகின்றார். ஆற்றுப்படை இலக்கணங்கள் அமைந்த இந்நூலில் இந்தக் காட்சி வர்ணனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவராற்றுப்படைக்கே தனிப் பண்பாயிருக்கின்றது. முஸ்லிம் புலவரால் எழுதப்பட்ட ஆற்றுப்படை நூல் இது ஒன்று தான் உளது.

அந்தாதி முறையில், இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த நூல்களில் திருமதீனத்தந்தாதி, மக்கா திரிபந்தாதி, நாகை யந்தாதி ஆகியன குறிப்பிடத் தக்கவைகளாகும்.

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ஆ. கா. பிச்சை இபுரு ஹிம் புலவர், திருமதீனத்தந்தாதியைப் பாடியுள்ளார். இவர் இலக்கணக்கடல் எனப் புகழ் பெற்றவர். மதீனவைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அங்குள்ள பூஞ்சோலைகளில் இனிய வாசனை பொழிவதாக விவரித்திருக்கிறார்.

அந்தாதி இனங்களிலொன்ருன திரிபந்தாதி இலக்கண மமைய, மக்கா திரிபந்தாதி எனும் நூலை மகாவித்துவான் குலாம் காதிறு நாவலரே எழுதியுள்ளார்.

நாகூர் ஆண்டகையைப் புகழ்ந்து பாடப் பட்ட நூல் நாகையந்தாதி. நாகை எனவும் நாகூர் அழைக்கப்படுகின்றது. பல நாடுகளிலிருந்து முஸ்லிம்களும், இந்துக்களும் இங்கு ஒவ்வொரு ஆண்டிலும் நடைபெறுகின்ற கந்தூரிக்கு வருவர். நாகூரில் சாஹுல் ஹமீது ஆண்டவர் அடங்கியிருக்கிறார்கள். நாகூர் ஆண்டவரைப் பற்றியும், நாகூரைப் பற்றியும் நாகை யந்தாதியில் செய்யது அப்துல் காதிறு நயினர் ஆலிம் புலவர் அவர்கள் பாடியுள்ளார்கள்.

முஸ்லிம் புலவர்கள் பிள்ளைத் தமிழ் நூல்களையும் இயற்றியுள்ளனர். இவற்றில் பெரும்பாலானவை ஆண்பாற்பிள்ளைத்தமிழ் நூல்களாகும். முஹம்மது (ஸல்) அவர்களைக் குழந்தையாகப் பாவித்து, பத்துப் பருவங்களில் பாடப் பட்டுள்ள **நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்** மிகச் சிறந்த நூல். தென்காசியைச் சேர்ந்த வடகரையூர் செய்யிது அனபியா சாகிபு என்பரால் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. மக்கா நகரின் நீர்வள, நிலவளங்களை ஆசிரியர் சிறப்பாக வருணித்துள்ளார்.

**முஹியித்தின் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்**, முஹியித்தீன் ஆண்டவரைக் குழந்தையாக வைத்துப் பாடப்பட்டது. நூலை இயற்றியவர் செய்யிது முஹியித்தீன் கவிராயர், பக்தாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துள்ள ஜெய்லானியில் பிறந்து, இஸ்லாத்திற்குப் புத்து யிரளித்த மகானைக் குழந்தையாக வைத்துப் பாடப்பட்டது இந்நூல். அல்லாஹ், நபிகள் நாயகம் (ஸல்), கலீபாக்கள், வலிமார்களின் அருள் இந்நூலிற் குறிப்பிடப்படுகின்ற குழந் தைக்குக் கிடைக்க வேண்டும் என இதில் வேண்டப்பட்டுள் ளது.

குலாம் காதிறு நாவலரின் மகன் ஆரிபு நாவலர் நாகூர்ப் பிள்ளைத் தமிழ் எனும் நூலை இயற்றியுள்ளார். இதுவும் நாகூர் ஆண்டகையைப்பற்றிய நூலாகும். அவர்களைக் குழந்தை யாகக் கொண்டு பாடப்பட்டது.

பெண்பாற்பிள்ளைத் தமிழ் இலக்கணம் அமைய பாத்திமா நாயகி பிள்ளைத் தமிழ் எனும் நூல் எழுதப்பட்டுள்ளது. நபி கள் நாயகத்தின் மகளார் பாத்திமா நாயகியைக் குழந்தை யாகக் கொண்டு, இந்நூல் பாடப்பட்டுள்ளது.

இவை தவிர, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பேரில் பீர் முஹம்மதுப் புலவர் இயற்றிய நூலும், ஆ. கா. பிச்சை இபுருஹீம் புலவர், நத்ஹரொலி பேரில் இயற்றிய நூலும், பிள்ளைத் தமிழ் நூல்களாயிருக்கின்றன.

அம்மானை எனும் வகையில், நபியவதார அம்மானையை சீறுப்புராணம் எழுதிய உமறுப் புலவரின் புதல்வர், கவிக் களஞ்சியப் புலவர் இயற்றியுள்ளார். 1713ம் ஆண்டில் வெளி யிடப்பட்ட இந் நூல், சீறுப்புராணத்தின் நபியவதாரப் படலத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**பப்பரத்தியார்** அம்மானை நாலாவது கலீபாவாயிருந்த அலி (ரலி) அவர்களின் வலிமையைப் புகழ்ந்து கூறுகின்றது. இதனை 1904ல், மதுரையைச் சேர்ந்த செய்யிது மீராப் புலவர் எழுதினர். தமிழ் நாட்டுப் பழக்கவழக்கங்கள் இதில் விவரிக்கப்பட்டுள்ளன.

அம்மானை என்ற விளையாட்டிலிருந்துதான் நூல்களுக்கும் அம்மானை எனும் பெயர் வழங்கியது எனச் சொல்லப்படுகிறது. சிலம்புகள் எனும் இரு காய்களை வைத்துக் கொண்டு ஒன்றை மேலே போட்டு, அது விழுவதற்கு முன்பு மற்றதையும் மேலே போட்டு கீழே விழாமல் கையில் பிடித்துக் கொள்ளும் விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டையே அம்மானை எனப்படுகிறது. இது பெண்களுக்கே உரிய விளையாட்டு. இவ்விளையாட்டின் போது, அம்மானைப் பாக்கள் பாடப் படுகின்றன.

கலம்பகம் என்ற இலக்கண வகையில் பாடப்பட்ட பல நூல்களும் இஸ்லாமிய அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன. கலப்பு, அகம் என்ற இரு சொற்களைக் கொண்டது கலம்பகம் எனும் சொற்ருெடர். அகப்பொருளில் பாடப்பட்ட தமிழ்ப் பிரபந்தவகையில் இதுவும் ஒன்ருகும். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பிறந்து வளர்ந்த மக்காவின் பெயரை வைத்து மக்காக் கலம்பகம் எனும் நூலை செய்கப்துல் காதிறு நெயினர் லெவ்வை ஆலிம் இயற்றியுள்ளார். இதன் பாட்டுடைத் தலைவர் முஹம்மது நபி (ஸல்) அவர்களாகும். இந்நூலின் காப்புச் செய்யுளில்:

வல்லான் முற்று முணர்ந்தான் தன்னை சொல்லா லுளத்தாற் செயலாற்ருெழுவாம், எனப் புலவர் குறிப் பிட்டுள்ளார். எல்லாம் வல்லவன் அல்லாஹ், அவன் முற்றுமுணர்ந்தவன். அத்தகைய பெரியோனை சொல்லால் (வாயால்) வாழ்த்தித் தொழுதல் மாத்திரம் போதாது. எப் பொழுதும் அவனையே நினைத்து, உள்ளத்தாலும் தொழ வேண்டும். அத்துடன் செயலாலும் தொழ வேண்டும் என சொற்சுவை, பொருட் செறிவுடன் புலவர் எடுத்துக் கூறுகிருர்.

ஏசல் என்ற பிரபந்த வகையொன்றுமிருக்கிறது. ஒரு வரை இன்னெருவர் ஏசிக் கூறும் பாட்டுத்தான் ஏசல் எனப் படுகிறது. இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த ஏசல் பாட்டுக்கள் இஸ்லாமிய கோட்பாடுகளையே கூறுகின்றன. காயற்பட்டணத்து செய்குனு லெப்பை ஆலிம் சாகிபுவின் மகன், அஹ்மது லெப்பை ஆலிம் சாகிபு என்பவர் தாய்—மகள் ஏசல் ஒன்றை இயற்றியுள்ளார். நபிகள் நாயகம் பேரில், ஏசற் கண்ணிகள் என்பது இந்நூலின் பெயர். இதில், இரு பெண் களுக்கிடையில் நடைபெறுகின்ற பேச்சு, நபிகள் நாயகத்தின் சிறந்த குணங்களை எடுத்துக் கூறுவதாயிருக்கிறது. முஹியித் தீன் ஆண்டவர் பேரில் தாய் மகள் ஏசல் என்ற நூலையும் இதே ஆசிரியர் இயற்றியுள்ளார். முஹியித்தீன் ஆண்டகை யின் சிறந்த குணங்களும் அவர்களின் புகழும் இந்நூலில் கூறப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய இலக்கியத்தில், மாலை என்ற பிரபந்த வகையில் அமைந்த நூல்கள் மிகப் பல இருக்கின்றன. பாட்டுக்கள் மாலைபோல் கோர்க்கப்பட்டிருந்தால். அந்நூல் மாலைப் பிரபந்த வகையினதாகும். மாலை நூல்களைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். நபிகள் நாயகத்தின் புகழ் கூறுகின்ற மாலை நூல்கள், முஸ்லிம்களின் மார்க்க அறிவை வளர்ப்பதற்கு எழுதப்பட்ட மாலை நூல்கள், நன்னெறிகளைப் போதிக்கின்ற மாலை நூல்கள், முஸ்லிம் பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்ற மாலை நூல்கள் என்ற பிரிவுகளில் இவை அடங்கும்.

**முது மொழி மாலை** நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகழைக் கூறுகின்றது. இதனை சீருப்புராணம் பாடிய உமறுப் புலவர்தான் இயற்றியுள்ளார். ஆனால், சீருப்புராணம் எழுது முன்னர், முதுமொழி மாலையைப் பாடியிருக்கிறார். **இறசூல் மாலை**, சாமு நெயினார் லெப்பை இயற்றியதாகும். இதுவும் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் புகழைக் கூறுகின்றது. **அபூஷகுமா மாலை, பலுலூன் அசுகாபி** மாலை ஆகிய இரண்டும் இஸ்லாமிய முறைப்படி நேராக அரசு செலுத்திய இரு அரசரின் சிறப்புக்களைக் கூறுகின்றன. இஸ்லாத்தின் இரண்டாவது கலீபாவான உமர் (ரலி) அவர்கள் நீதி செலுத்துவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய பொழுது, தனது சொந்த மகன் அபூஷகுமாவுக்குத் தண்டனை கொடுத்தது பற்றி, ஆபூஷகுமா மாலை கூறுகின்றது. திருப்பாலைக்குடி செய்தக்காதிர் புலவர் இதனை இயற்றினார். நபிகள் நாயகத்தின் தோழராயிருந்த பலுலூன் என்பவரின் தூய தன்மையை பலுலூன் அசுகாபி மாலை எடுத்துரைக்கிறது. வேதாளையூர்க் கப்பல் நெயினார் மகன் கொத்தலகான புலவர் இதனைப் பாடியிருக்கிறார்.

நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்பு வந்த தலைவர்களைப் பற்றி, **இராஜமணி மாலை** கூறுகின்றது. இதனை பக்கிர் மதாறுப் புலவர் இயற்றினார். முஹியித்தீன் ஆண்டகையின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்ற **முஹியித்தீன் மாலை**யையும் இவர்தான் எழுதினார்.

அகந்தெளியுமாலை, அதபுமாலை முதலியன நன்னெறிகளை எடுத்துக் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடைசி நேரத்தில், அவர்களின் மகளார் பாத்திமா (ரலி) அவர்கள் தலைமாட்டிலிருந்து கேள்வி கேட்கவே, அவற்றிற்கு அவர்கள் அளித்த பதில்களைக் கூறுகின்றது ஒசியத்து மாலை. இதனை எழுதியவரின் பெயர் தெரியவில்லை.

எளிதில், படிப்பவர் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் இறைவனின் புகழ் பாடும் நூல் திருப்புகழ் என வழங்குகிறது. ஆனால், முஸ்லிம் மக்களுக்கிடையில் திருப்புகழ் என்றவுடன், காயற்பட்டணத்தைச் சேர்ந்த காசிம் புலவர் நபிகள் நாயகத்தின் மேல் பாடிய திருப்புகழ் முன்னால் தோன்றும். இந்தத் திருப்புகழ், ஓசை நயம் சிறந்து விளங்கும் நூலாக விளங்குகின்றது. நபிகள் நாயகத்தின்மீது பாடப்பட்ட இன்னொரு நூல் நவரத்தினத் திருப்புகழ். இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சு. அசனா லெப்பை என்பவர் இதை இயற்றியிருக்கிறார். முஹியித்தீன் ஆண்டவர் பெயரில் முஹியித்தீன் கவிராயர் என்பவர் திருப்புகழ் பாடியிருக்கிறார். மற்றும், சந்தத் திருப்புகழ், அப்துல் காதிறுப் புலவரால் இயற்றப்பட்டுள்ளது.

கீர்த்தனங்கள், சிந்து, கும்மி, தாலாட்டு போன்ற வகைகளிலும் முஸ்லிம்களுக்கே சொந்தமான படைப்போர், முனாஜாத்து, கிஸ்ஸா என்ற வகைகளிலும் பாடலில் அமைந்த பல நூல்களை முஸ்லிம் புலவர்கள் எழுதியுள்ளனர். வசன நடையில் இவர்கள் எழுதிய நூல்கள் பல பிரிவுகளைச் சேர்ந்தனவாகும். இஸ்லாத்தின் சில குழுவினர்க்கிடையில் நடந்த விவாதங்கள் சம்பந்தமாகவும் வசன நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறாக, கவிதையிலும் உரை நடையிலும் எழுந்துள்ள இஸ்லாமிய இலக்கிய நூல்களைப் பாதுகாத்து படித்துப் பயன் பெறுதல் எங்கள் கடனாகும்.

ஃ ஃ ஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# சிறந்த வளர்ச்சி

அரும்பெரும் முயற்சியின் பயனால்தான் நூல்கள் உருவாக்கப்படுகின்றன. "எழுத்தாளனின் ஒவ்வொரு படைப்பும், ஒரு தாய் குழந்தையைப் பெறுவது போல, சிரமத்துடன் நடைபெறுவதாகும். குழந்தைகளைப் பெற்ற தாய், குழந்தைகளைப் பெற்றதாலும், பேணி வளர்ப்பதாலும் நலிந்து கொண்டே வருவதைப் பார்க்கிறோம்'' என்று 1974 ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் சென்னை புதுக் கல்லூரியில் நடைபெற்ற இரண்டாவது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டில் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராயிருந்த டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் அன்று கூறினார். நூல் இயற்றுதல் எத்தனைச் சிரமமான தென்பதை இது நன்றாக எடுத்துக் காட்டுகிறது. இரு படைப்புச் செயல்களிலும் ஒரு வித்தியாசமுண்டு. ஒரு குழந்தை, கருவான பின் பத்து மாதங்களில், சிலசமயம் ஆறேழு மாதங்களில் கூடப் பிறந்துவிடும். ஆனால், ஒரு நூல் உருவாக்கப்பட ஆரம்பமானதிலிருந்து, நாலைந்து மாதங்களுக்குள் பிரசுரமாகி விடலாம். சிலசமயம், ஆறேழு ஆண்டுகளுக்குமேல் பிந்தியும் வெளியாகலாம். பல்லாண்டுகளின் பின்புகூட, வெளியிடப் படாமலேயும் இருக்கலாம்.

மிக மிகச் சிரமத்துடன் ஆக்கப்படுகின்ற தரமான நூல்களைப் பற்றி அறிவதற்கு மக்களிடம் ஆவல் பிறப்பது இயற்கை. இந்த வகையில், இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதிக்குப் பின்னர் என்னென்ன முயற்சிகள் நடைபெற்றுள்ளன என்பதை மேலோட்டமாகப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலில், 1953 ம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் பிரசுரிக்கப்பட்ட "முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டு" (Muslim Contribution to Tamil Literature) எனும் நூல், பழைய இலக்கியங்களைப் பற்றி எடுத்துக் கூறியது. இலங்கை பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் "இளங்கதிர்" எனும் ஆண்டு இதழின் ஐந்தாவது மலர் ஆசிரியராயிருந்தபோது, நான் இந் நூல் பற்றிய குறிப்பொன்றை மலரில் வெளியிட்டுள்ளேன். அது வருமாறு: "பல காலமாகத் தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்து வந்தனர் பல முஸ்லிம் புலவர்கள். அவர்களால் எழுதப்பட்ட சிறந்த பல நூல்களிருந்தும் அவற்றைப் பற்றித் தமிழ் கற்றோர் அறியாதவர்களாய் இருக்கின்றனர். அதற்குக் காரணம், அந்நூல்களைப் பற்றியோ, அவற்றை எழுதிய புலவர்களைப் பற்றியோ விரிவான ஆராய்ச்சி நூலொன்று இது காறும் வெளிவராமலிருந்ததுதான் என்பதில் ஐயமில்லை. அந்தக் குறையை நிவர்த்தி செய்ய ஜனாப் ம. மு. உவைஸ், எம். ஏ. அவர்கள் முன்வந்திருப்பது போற்றத்தக்கவொன்றாகும். அவர் சுமார் இரண்டாண்டுகட்கு முன் ஆங்கிலத்தில் எழுதிய 'முஸ்லிம் தமிழ் இலக்கியம்' என்ற நூல் வெகு விரைவில் வெளிவரவிருக்கிறது". இதற்குச் சற்று முன்னர், முஸ்லிம் மஜ்லிஸ் சஞ்சிகையில் எனது சிறிய கட்டுரையுடன், குலாம் காதிறு நாவலர் அவர்களின் 'குவாலீர்க் கலம்பகம்' பிரசுரமானது.

ஆங்கில நூல் வெளியானதையடுத்துத் தோன்றிய 'இலக்கியத் தென்றல்' எனும் நூலில்தான் முதன் முதலாக, தமிழில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய விரிவான விபரங்கள் வந்துள்ளன. இந்த நூலின் நாலாவது அத்தியாயத்தில், 68-ம் பக்கம் தொடங்கி 87-ம் பக்கம் வரை, இருபது பக்கங்களில் எமது மூதாதையரின் சிறந்த நூல்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. நூலின் முன்னுரையில் கலாநிதி சு. வித்தியானந்தன் கூறுகிறார்: "இஸ்லாமியரின் தமிழ்ப் பணியை அறிந்தோர் தொகை மிகக் குறைவு. இஸ்லாமியர் தமிழிலே இயற்றிய நூல்களைக் காப்பியங்கள், பிரபந்தங்கள், இசைப் பாடல்கள், ஞானப் பாடல்கள், உரை நடை நூல்களெனப் பல பிரிவுகளாக வகுத்து, அவற்றைப் பற்றிக் கூறுகின்றது, இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு என்னும் பகுதி".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு என்ற நாலாம் பகுதியின் கடைசிப் பந்தியில் அவர் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய அறிவு குறைந்திருத்தல் பற்றிக் கவலை தெரிவித்துள்ளார். "......இஸ்லாமியத் தமிழர் தமிழ் மொழியை வளம் படச் செய்தனர். இவர்களின் அரும்பணியைத் தமிழ் நாடு அறியாதிருத்தல் வருந்தத்தக்கதே. இஸ்லாமியத் தமிழருக்கே தமது மக்கள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு எத்தகையதெனத் தெரியாதிருத்தல் வியப்புக்குரியது".

தனது நூலில் தமிழ் இலக்கியப் பரப்பு, தமிழ் இலக்கண நூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள் என்ற மூன்று பகுதிகளை எழுதி விட்டு, நாலாவது பகுதியாக இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு பற்றி அவர் எழுதியதிலிருந்து எத்தனை முக்கியத்துவம் அளித்து இந்தத் தொண்டு பற்றிய அறிவைப் பரப்ப விரும்பினர் என்பது தெளிவாகிறது. இதனையடுத்து, ஐந்தாம் பகுதியாகத்தான் ஈழ நாட்டுப் பெரியார் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு எனும் பகுதி இடம் பெற்றுள்ளது.

**இஸ்லாமியப் புலவர் திறமை**

"இலக்கியத் தென்றல்" தமிழ் இலக்கியப் பரப்பு பற்றி விபரித்து வரும் பொழுது, 26-ம், 27-ம் பக்கங்களில், முஸ்லிம் புலவர்களின் திறமையைப் பற்றியும் கூறுகிறது. "தமிழ் நாட்டு இந்துக்கள் பல நூல்களை இயற்றியது போல பல தமிழ் நாட்டு இசுலாமியரும் சிறந்த நூல்கள் இயற்றியுள்ளார்கள். நூல் அமைப்பு முறையிலும், நடையிலும், போக்கிலும் இசுலாமியப் புலவரின் நூல்களுக்கும், புகழ் பெற்ற மற்றைய தமிழ் இலக்கியங்களுக்கும் அடிப்படையான வேறுபாடு இல்லை. அவர்களின் இலக்கியங்களும் தமிழ் மரபுக்கு ஒத்தனவாகவும் தமிழ் பண்புக்கு இயைந்தனவாகவும் அமைந்திருக்கின்றன. இவ்விலக்கியங்களிலும் கற்பனைத்திறன், பொருட் சிறப்பு, சொல்லழகு முதலியவற்றைக் காணலாம். பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த இசுலாமியப் புலவருள் சிறந்தவர் குலாம் காதிறு நாவலர். புராண வகையில் நாகூர்ப் புராணம் முதலியவையும், கோவையில் மதுரைக் கோவையும், கலம்பகத்தில் நாகூர்க் கலம்பகம், குவாலீர்க் கலம்பகம் முதலியவையும் அந்தாதியில் திருமதினத்திரிபந்தாதியும், மாலையில் சமுத்திர மாலை முதலியனவும், உரை வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் சிறுப்புராண வசனம், திருமணிமாலை வசனம் முதலியவை யும் இவரால் செய்யப்பட்டவை. இவையன்றி, மதுரைத் தமிழ் சங்கத்துப் புலவர் புலவராற்றுப்படையும் இவரால் இயற்றப்பட்டதே. முகம்மது நெய்னு மரைக்காரும் நாகூரைச் சேர்ந்தவர். புகழ்ப்பா மஞ்சரி, சித்திரக் கவிகள், வண்ணக் கவிகள் முதலியன இவரால் செய்யப்பட்டன. மக்காக் கோவை முதலிய நூல்கள் இயற்றியவர் மு. செவத்த மரைக்காயர். பிச்சையிபுறுகீம் புலவர், நாகூர்ப் புராணம் சித்திரக் கவிப் படலத்துக்கு உரை எழுதினுர். பிரபந்தக் கொத்தும் இவர் நூல்களுள் ஒன்று. செய்கப்துல் காதிர் நயினுர் லெப்பை ஆலிம் புலவர் நாகையந்தாதி, சொர்க்க நீதி முதலிய நூல்கள் யாத்தனர். 'மகாவித்துவான் பாவகை வல்ல கல்விக் களஞ்சியம் முகம்மதுப் புலவர்' எனச் சிறப்பிக்கப் பெறும் முகம்மதுப் புலவர் செய்த நூல்களுள் மீறுன் சாயிபு பிள்ளைத் தமிழ் ஒன்று. இன்னும் பல இசுலாமியப் புலவர், பல நூல்களை இயற்றினர்''.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமியர் இயற்றிய இலக்கியங்களுக்குச் சிறப்பிடம் முதன் முதலில் அளித்த பெருமை, பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களையே சாரும். முப்பதாண்டுகளுக்கு முன்னர் அவர் இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றிச் சிறந்த மதிப்பீடு செய்து, தமிழறிந்தவர்கள் அதனைப் பற்றி அறியும் வகையில், தனது முதல் நூலில் எழுதினுர்.

''கலாநிதி வித்தியானந்தன் எழுதிய இலக்கியத் தென்றல், கலையும் பண்பும் என்ற நூல்கள் முஸ்லிம் மக்களுடைய ஆதரவைப் பெற்றுள்ளன'' என்று 1964-ம் ஆண்டில் வெளியான, ஈழத்து இலக்கிய வளர்ச்சி' எனும் நூலின் 176-ம் பக்கத்தில் கனக செந்திநாதன் குறிப்பிட்டுள்ளார். 'கலையும் பண்பும்' எனும் நூல் இஸ்லாமிய நாகரிகம் பற்றியது. இதன் முதற் பதிப்பு 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளிவந்தது. கல்வித் தராதர உயர்தரப் பரீட்சைப் பாடநூலாகப் பல வருட காலம் இருந்தது.

''கலையும் பண்பும்'' என்ற நூலில் இஸ்லாமியர் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு பற்றி இரண்டு பகுதிகளில் 129-ம் பக்கத்திலிருந்து 160-ம் பக்கம் வரை எடுத்துக் கூறப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. "இஸ்லாமியர் தமிழ் மொழிக்காற்றிய தொண்டினை இஸ்லாமியரே அறியார். காப்பியம், கலம்பகம், அம்மானை, அந்தாதி, ஆற்றுப்படை, திருப்புகழ், கும்மி, தாலாட்டு, மாலை ஏசல், சிந்து ஆகிய இலக்கிய வகைகளில் இஸ்லாமியர் இயற்றிய நூல்களைத் தமிழ்த் தொண்டு முதலாம் பகுதி விரிவாகக் கூறுகின்றது. இரண்டாம் பகுதியில் இஸ்லாமியர் தமிழை வளம்படுத்தத் தமிழிற் புகுத்திய புதிய பிரபந்த வகைகளாகிய படைப்போர், முனாஜாத், கிஸ்ஸா, மசாலா, நாமா ஆகியவற்றின் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இஸ்லாமியர் இயற்றிய ஞானப்பாக்கள், மாலை நூல்கள், சமய ஒழுக்க நூல்கள், உரை நடை நூல்கள் ஆகியனவும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன''.

இவ்வாறாக, இஸ்லாமியப் புலவர்களின் படைப்புகள் பற்றிய அறிவு பரவுவதற்கு கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்கள் அரும்பணி புரிந்துள்ளார்கள். இலக்கியத் தென்றல், கலையும் பண்பும் ஆகிய இரு நூல்களும் பெரும்பாலாக உயர் வகுப்பு மாணவர்களாலேயே படிக்கப்பட்டன. இதனால், பெருந்தொகையான இளைஞர்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய அறிவு பெற்றதோடு மட்டுமல்லாமல், அத்தகைய இலக்கியம் படைப்பதில் அடியெடுத்து வைப்பதற்கு உந்தப்பட்டுமிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, கலாநிதி வித்தியானந்தன் அவர்களின் பெருமுயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

1961-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் "மணிக்குரல்'' பதிப்பகம் வெளியிட்ட "இஸ்லாமியத் தென்றல்'' தான் கலாநிதி எம். எம். உவைஸ் எழுதி, வெளியிடப்பட்ட முதலாவது தமிழ் நூல். இதில் அவர், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் முஸ்லிம்கள் குடியேறி மொழி, பண்பு, கலாசாரம் ஆகியன சீர்பெறச் செய்த பணிகளைப் பற்றிக் கூறியுள்ளார்.

ஆர். பி. எம். கனி, பி. ஏ. பி. எல். அவர்கள் தயாரித்து 1963-ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட "இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்'' கடந்தகால இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், இன்றைய இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற இரு பகுதிகளைக் கொண்டதாயுள்ளது. நூலின் 153-ம் பக்கத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

216-ம் பக்கம் வரை அறுபத்து மூன்று பக்கங்களில் பழைய இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப்பற்றி அவர் எடுத்துக் கூறியிருக்கிறார். இன்றைய இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றி 217-ம் பக்கத்திலிருந்து 247-ம் பக்கம் வரை முப்பது பக்கங்களிலேயே கூறப்பட்டுள்ளது. முடிவுரையில் "இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் இன்றைய நிலையை வெகு சுருக்கமாகக் குறிப்பிட்டோம்'' என அவரே கூறுவது போல, இந்த இலக்கிய வரலாறு மிகச் சுருக்கமாகவே அமைந்துள்ளது. இந்த நூலில், அரபி இலக்கியம், இஸ்லாமிய நூல்நிலையங்கள், பாரஸீக இலக்கியம், துருக்கி இலக்கியம், உர்து இலக்கியம், ஆங்கிலத்தில் இஸ்லாமிய இலக்கியம் போன்றன பற்றியும் எழுதியுள்ளார்.

1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பிரசுரமான ஈழத்து இலக்கிய வளர்ச்சி எனும் நூலை தமிழாசிரியரும் இலக்கிய மதிப்பீட்டாளருமான கனக-செந்திநாதன் எழுதினார். இதில் முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றி 135-ம் பக்கத்திலிருந்து 160-ம் பக்கம் வரை அவர் எடுத்துரைத்துள்ளார். 1950-ம் ஆண்டுக்குப்பின்னர் தோன்றிய எழுத்தாளர்கள் பற்றியும், அவர்களின் படைப்புக்கள் பற்றியுமே இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதற்கு முன்புள்ளவர்கள் பற்றி மிக, மிகச் சுருக்கமான தகவல்களே காணப்படுகின்றன.

''குடத்துளிட்ட தீபமாக மறைந்து கிடக்கும் இலக்கிய முயற்சிகளை, தமிழ் வாசகர் மத்தியிலே வைக்க வேண்டிய கடமை முஸ்லிம் எழுத்தாளருக்கு உண்டு. இந்தக் கடமையினை மறந்து, பல கோஷங்களுக்குப் பின்னுற் சென்று, சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்து செயலாற்றுஞ் சில முஸ்லிம் எழுத்தாளர்களுடைய செயல் நாணுந் தகைமையுடையது. இந்தப் பொறுப்பற்ற செயலை வருங் காலச் சந்ததியினர் மன்னிக்க மாட்டார்கள்'' என அவர் கூறியிருத்தல் சில முஸ்லிம் எழுத்தாளர்களின் பொறுப்பற்ற தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

**பழைய நூல்கள் பற்றி . . .**

1970 களில், முதலில், இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பற்றி விரிவாகக் கூறும் நூலாக வெளிவந்துள்ளது ''இஸ்லாமிய இலக்கியச் சிந்தனை''. அதிரை அஹ்மத், B. A. எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பிரசுரமான இந்நூலில், பழைய இஸ்லாமிய இலக்கியங்களைப்பற்றி ''பிறை'' மாத சஞ்சிகையில் வெளியான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இருபத்து மூன்று இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளில், வெவ்வேறு பழைய இலக்கியங்கள் பற்றி விரிவாகவே அவர் எழுதியிருக்கிறார். இந்த நூல்களை மிகச் சிரமப் பட்டுத் தேடிக் கண்டுபிடித்து, தான் படித்ததோடு நின்று விடாமல், ஏனையவர்களும் அந்த உருசியை அனுபவிக்கட்டும் என்ற நன் நோக்குடன் படித்த நூல்களின் சாற்றைப் பிழிந்து தருவது போல், கட்டுரைகள் அமைந்துள்ளன.

1976-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிரசுரமான நூல் ''இஸ்லாமும் இன்பத் தமிழும்''. தமிழ் நாடு அரசாங்கம் 1976-ம் ஆண்டுக்கான மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்களுக்கான முதலாவது பரிசை இந்நூலுக்கு வழங்கியது. தற்பொழுது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பேராசிரியராயிருக்கின்ற அல்ஹாஜ் கலாநிதி ம. மு. உவைஸ் எழுதிய இந்நூலிலும் பழைய இலக்கியங்களைப் பற்றிய கட்டுரைகளே இடம் பெற்றுள்ளன.

''இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை உலகுக்கு உணர்த்தும் உத்தமப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் அல்ஹாஜ் டாக்டர் ம. மு. உவைஸ் எம். ஏ. பி. எச்டி. அவர்கள் எழுதிய ''இஸ்லாமும் இன்பத் தமிழும்''.. ...நாம் கேட்டிராத, கேட்டிருந்தாலும் அதிகம் அறிந்திராத எத்தனையோ இஸ்லாமியச் சிற்றிலக்கியங்களை அறிமுகப்படுத்துகிறது என நூலின் பதிப்புரை கூறுகிறது. ''அவற்றின் அழகை விளக்கும்போது, அந்நூல்கள் முழுவதையும் அவசியம் படிக்க வேண்டும் என்னும் ஆவல் மேலிடுகிறது, நமக்கு. அத்துடன் பாரகாவியங்கள் பலவற்றைப் படைத்த முஸ்லிம்கள் இத்தனை சிற்றிலக்கியங்களைச் செய்திருக்கிறார்களா என்னும் வியப்பும், சிற்றிலக்கியங்கள் என்றாலும் அவை இனிமை செறிந்த இலக்கியங்கள் என்னும் எண்ணமும் நமக்கு ஏற்படுகிறது'' என மேலும் பதிப்புரை தெரிவிக்கின்றது. இருபத்தேழுக்கு மேற்பட்ட சிற்றிலக்கியங்கள் பற்றி, அவர் 1950 களின் ஆரம்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தினகரன்'' பத்திரிகையில் எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்புத்தான் ''இஸ்லாமும் இன்பத் தமிழும்''.

கலாநிதி உவைஸ் இஸ்லாமிய காப்பியங்கள் பற்றி எழுதிய ஆங்கில நூல் 1976-ம் ஆண்டு மே மாதம் வெளிவந்தது. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக அவர் இந்த நூலை ஆங்கிலத்தில் எழுதினார். இஸ்லாமிய நெறிகளை அடிப்படையாகக் கொண்ட தமிழ்க் காப்பியங்களின் பல்வேறு அம்சங்கள் பற்றி இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. இறை காப்பு, இயற்கை வர்ணனை, காப்பியத்தின் உட்பொருள் பற்றிய விவரங்கள் பரந்த அடிப்படையில் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

தமிழ், தமிழ்ப் பண்பாடு பற்றிப் பிறமொழிகளில், 1976-ம் ஆண்டில் வெளியான நூல்களுக்கான இரண்டாவது பரிசை தமிழ் நாடு அரசாங்கம் இந்நூலுக்கு வழங்கியது. Muslim Epics in Tamil Literature எனும் பெயரைக் கொண்ட இந்நூல் சுமார் ஐநூறு பக்கங்களைக் கொண்டது.

''இஸ்லாமியத் தமிழ்க் காவியங்கள்'' எனும் தலைப்பில் ஜே. எம். சாலி, எம். ஏ. எழுதிய நூல் 1978-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் வெளிவந்திருக்கிறது. முதற் காவியமான சீறாப் புராணம் முதல், மணக் காவியம் எனப்படும் திருமணக்காட்சி வரை, பதின் மூன்று காவியங்கள் பற்றி ஆராய்ந்த பின்னர், அளவில் சிறிதாகவும் சிற்சில காவிய இலக்கணங்கள் குறைவுபட்டனவுமான சிறு காவியங்கள் சில பற்றியும் ஆசிரியர் விபரங்கள் தந்துள்ளார். மலேசிய வானொலியில் முதலில் ஒலிபரப்பாகி, 1968-ம் ஆண்டில் சிங்கப்பூர் ''தமிழ் முரசு'' பத்திரிகையில் இவை கட்டுரைகளாக வெளிவந்துள்ளன.

பழைய இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்வதற்கு உதவும் நூல்கள் பற்றி இது வரை பார்த்தோம், இனி பழைய இலக்கியங்களில் மறு பதிப்புக்கள் வெளியிடுவதில் என்னென்ன முயற்சிகள் நடைபெற்றுள்ளன என்பதைச் சற்றுக் கவனிக்கலாம்.

**மறுபதிப்புக்கள்**

1950-ம் ஆண்டின் பின்னர், 1953-ம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியான இலங்கைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் சஞ்சிகையான ''இஸ்லாமிகா ஸெய்லானிகா'' தமிழ் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் பிரசுரமான ''குவாலீர்க் கலம்பகம்'' முதன் முதலில் வெளியான மறுபதிப்பாகும். நாகூர் தர்கா வித்வானுகிய குலாம் காதிறு நாவலர் இயற்றிய இதனை முற்றிலும் எனது முயற்சியால், இச் சஞ்சிகையில் சேர்த்தேன். மறுபதிப்பில், பதவுரை, விளக்கவுரை என்ற ஒன்றும் வரவில்லை. நூல் மிக எளிமையாக இருந்ததால், அப்படியொன்றும் தேவைப்பட வில்லையெனக் கருதினேம்.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில், அலஹாபாத்தி லிருந்த 96 கிலோமீட்டர் தூரத்திலுள்ள மாணிக்கப்பூரில் ஹிஜ்ரி 910-ம் ஆண்டு (கி. பி. 1490)-ல் பிறந்த ''நாகூர் ஆண்டவர்'' எனப் புகழ் பெற்றுள்ள சாஹுல் ஹமீது நாயகம், ஹிஜ்ரி 928-ம் ஆண்டிலிருந்து பத்து வருட காலம் குவாலீர் என்னுமிடத்தில் தங்கி, ஸெய்யது முஹம்மது கௌது ஷத்தாரி என்ற ஞானகுருவிடம் ஆன்மீகப் பயிற்சி பெற்ருர்கள். நாகூர் ஆண்டவர் அவர்களின் ஞானகுருவைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது, குவாலீர்க் கலம்பகம். சமயப் பெரியார்களைப் பற்றிக் கலம்பகம் பாடப் படும் பொழுது, அவர்களின் பெயரைக் குறிக்காமல், அவர்களோடு சம்பந்தப்பட்ட இடத்துப் பெயரைக் குறிப்பிடும் மரபு உள்ளது. அதனுல் தான், குவாலீர் என்னுமிடத்தில் ஆன்மீகப் பயிற்சி அளித்து வந்த ஸெய்யது முஹம்மது கௌது அவர்களைப் பற்றிய கலம்பகம் 'குவாலீர்க் கலம்பகம்' எனும் பெயர் பெற்றுள்ளது. முஹம்மது நபி (ஸல்) அவர்களைத் தலைவராகக் கொண்ட மக்காக் கலம்பகம், அவர்கள் பிறந்து வளர்ந்த இடமாகிய திருமக்கா நகரின் பெயரால் வழங்கப் படுகிறது. காயல்பட்டினம் செய்கு அப்துல் காதிறு நயினர் லெவ்வை ஆலிம் புலவர் அவர்கள் மக்காக் கலம் பகத்தை எழுதியுள்ளார்கள்.

தொண்ணூற்ருறு வகைத் தமிழ் பிரபந்தங்களில் கலம் பகம் ஒன்று. கலம்பகம் என்பதை கலப்பு அகம் எனப் பிரிக்கலாம். புயல், காற்று, காலம் என்ற பல்வேறு உறுப் புக்களைக் கொண்டு கலத்தலாய் இருப்பதால் கலம்பகம் எனப்படுகிறது. பல வகையான பாக்களைக் கொண்டிருப் பதால், கலம்பகம் என வழங்கப்பட்டுள்ளதாகவும் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். வெண்பா முதலியனவும், வேறு பாவினங்களும் கலம்பகத்தில் இடம் பெறுகின்றன. பலவகைப் பாவினங்களோடு மட்டுமல்லாமல், அகம் புறம் எனும் பொருட்களையும், நகை, பெருமிதம், கோபம், உவகை முதலிய பல வகைச்சுவைகளும் நிரம்பிய கலவைதான் கலம்பகமாகும்.

''இஸ்லாமிகா ஸெய்லானிகா'' சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் ஒரு பகுதியை இங்கு எடுத்துக் கூறுதல் பொருத்தமாயிருக்கும்: ''இலங்கைப் பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸின் வருடாந்தச் சஞ்சிகையில் தமிழ்ப் பகுதியொன்று சேர்க்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் தாய் மொழி தமிழாக இருந்தும், இம் முஸ்லிம் சஞ்சிகையில் தமிழ்ப் பகுதியொன்று இதுவரையில் சேர்க்கப்படாதிருந்தது ஒரு பெரும் குறையாகும். இஸ்லாமிய தத்துவம், முஸ்லிம் கலாச்சாரம் ஆகியவற்றைப் பற்றிய அறிவை வளர்ப்பதைக் கொண்ட இச்சஞ்சிகையில் தமிழ் இடம் பெறுதிருந்த குறை, தமிழ் படிக்கும் பல்கலைக் கழக முஸ்லிம் மாணவரின் தொகை அதிகரிப்பின் காரணமாக இத்துடன் நிவர்த்தியாகிறது''.

முதன் முறையாகத் தமிழ்ப் பகுதி ஆரம்பிக்கப்பட்ட சஞ்சிகையில், இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மறுபதிப்பு முயற்சி முதன் முதலில் ஆரம்பமானதுடன், அகில உலகிலுமுள்ள தமிழறிந்த முஸ்லிம்களை எதிர்நோக்கியிருந்த பெருங் குறை யொன்றும் நிவர்த்தியாகியது. அத்துடன் இச்சஞ்சிகையில், அப்பொழுது பல்கலைக் கழக தமிழ் விரிவுரையாளராயிருந்த திரு. வி. செல்வநாயகம், (எம். ஏ.) அவர்கள் எழுதிய ''மஸ்தான் சாகிபுப் பெரியாரும் அவர்தம் பாடற் சிறப்பும்'' என்ற கட்டுரையும், ஜனுப் ம. மு. உவைஸ் எம். ஏ. எழுதிய ''முஸ்லிம் திருப்புகழ்'' எனும் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மறுபதிப்புத் துறையில் இன்னும் பல அரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவெனினும், பிரதானமான சில முயற்சிகள் பற்றிப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா வித்துவான் வா. குலாம் காதிறு நாவலர் எழுதிய மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் ''புலவராற்றுப்படை''யின் மறு பதிப்பு 1968-ம் ஆண்டில் வெளியானது. வித்யோதய பல் கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராயிருந்த ம. மு. உவைஸ் பதிப்பித்து பிரசுரித்த இந்நூலில் சிறந்த அறிமுகமும் விளக் கங்களும் இடம் பெற்றுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண் டின் கடைசிப் பகுதியில் எழுதப்பட்டு முதலில் 1903-ம் ஆண்டு அச்சாகிய இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1968-ம் ஆண்டில் தான் பிரசுரிக்கப்பட்டது. ''இந்நூலை வெளியிடும் உரி மையை அளித்தவர் ஆரிபு நாவலர் அவர்கள். அவ்வுரிமையை எமக்குப் பெற்றுத் தந்தவர் ஹாஜி செ. முஹம்மது ஹனிபா பி. ஏ. அவர்கள்''. என்று பதிப்பாசிரியர் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

தமிழ் இலக்கியப் பிரபந்த வகையில் ஆற்றுப் படையும் ஒன்று. ஆற்றுப்படை என்றால் ஆற்றுப் படுத்துதல் அல்லது வழிப்படுத்துதல் எனும் பொருள்படும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பரிசு பெற்ற ஒரு புலவர் இன்னொரு புலவருக்கு அங்கு சென்று பரிசு பெற வழி காட்டுதலையே இந்நூல் எடுத் துக் கூறுகிறது. சங்க காலத்துத் தமிழ் மரபுக்கு ஒத்த கவிப் பாங்கில் இந்நூல் அமைந்துள்ளது.

சென்னையில் 1974-ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டா வது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டில் இலங்கையில் வெளிவந்த முதல் நவீனமான 'அஸன்பே கதை' வெளியிடப்பட்டது. இலங்கை முஸ்லிம்களின் சீர்திருத்தத் தந்தையான முஹம்மது காஸிம் ஸித்தி லெவ்வை அவர்கள் எழுதிய இந்நூல் தமிழில் வெளியான இரண்டாவது நெடுங் கதை என இலக்கிய வரலாற்றாசிரியர் கூறுகின்றனர். இவர் சமூக முன்னேற்றப் பணியில் ஈடுபட்டது போலவே, இலக்கிய வளர்ச்சிக்கும் அரும்பணி புரிந்துள்ளார். கண்டியில், 1838-ம் ஆண்டில், பிரசித்தி பெற்றிருந்த வழக்கறிஞரும், தனவந்தரு மான சித்தி லெவ்வையின் மகனாகப் பிறந்து, வழக்கறிஞராக வும், நீதிபதியாகவும் கடமையாற்றிக் கல்விமானாய்த் திகழ்ந்த முஹம்மது காஸிம் ஸித்தி லெவ்வை 1898-ம் ஆண்டு பெப்ர வரி மாதம் 5-ம் திகதி இறையடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில், செட்டியார் தெரு மீலாத் இயக்கத் தலைவராகவும் கொழும்புத் தமிழ்ச் சங்கக் காப்பாளராகவும் இருந்து வருகின்ற இலக்கிய ஆர்வலர், சமாதான நீதவான் ஆலிஜனுப் எஸ். எம். ஷஹாப்தீன் எடுத்த பெருமுயற்சியால் ''அஸன்பே கதை'' மறுபிரசுரமானது.

இது போன்று, 1975-ம் ஆண்டில் மீலாத் இயக்கத்தினர், ''நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேரில் பிள்ளைத் தமிழ்'' என்ற நூலையும் பிரசுரித்தனர். தென்காசி வடகரையூர் செய்யிது அனபிய்யா சாகிபுப் புலவர் அவர்கள் பாடி, 1883-ம் ஆண்டில் பிரசுரமானது இந்நூல். புதிய பதிப்பில் திருச்சிஞப்பள்ளி, ஜமால் முஹம்மது கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் பெரும் புலவர், பேராசிரியர் சி. நயினர் முஹம்மது, எம். ஏ. அவர்கள் எழுதிய உரை சேர்க்கப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பிள்ளையாகக் கண்டு, அவர்களைப் பற்றிப் பாடப்பட்டதுதான் ''நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்''. மேலும் மேலப்பாளையம் மீரான் சாகிபுப் புலவர் பாடிய ''இறசூல் நாயகம் பிள்ளைத் தமிழ்'', தொண்டி பீர் முஹம்மதுப் புலவர் பாடிய ''நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்'', செய்கு மீரான் புலவர் பாடிய பாத்திமா நாயகி பிள்ளைத் தமிழ் போன்று சுமார் பதினைந்து பிள்ளைத் தமிழ் வகையிலான இஸ்லாமிய இலக்கியங்கள் உள்ளன.

முஹியித்தீன் ஆண்டவர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்ற ''முஹியித்தீன் புராணம்'' ஹஜ்ஜுக்குப் போன படலத்தை, மீலாத் இயக்கத்தினர் 1977-ம் ஆண்டில் வெளியிட்டனர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பதுறுத்தீன் புலவர் பாடிய முஹியித்தீன் புராணத்தின் ஹஜ்ஜுக்குப் போன படலத்திற்கு மருதமுனையைச் சேர்ந்த பாடசாலை அதிபர் மர்ஹூம் ஜே. எம். எம். அப்துல் காதிர் உரை எழுதியுள்ளார். பதவுரை, தெளிவுரை, விரிவுரை, விளக்கவுரை, இலக்கணக் குறிப்பு, அறபுச் சொல் விளக்கம் போன்ற சிறப்பு அம்சங்கள் இந்நூலில் உள்ளன.

செட்டியார் தெரு மீலாத் இயக்கத்தினரின் பணி, மிகப் பாராட்டப்பட வேண்டியதாகும். மேலும் பல பழைய இஸ்லாமிய இலக்கியங்களை உரைகளுடன் தொடர்ந்து இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட வேண்டும். இதே போன்று, ஏனைய இஸ்லாமிய இயக்கங்களும் சிறந்த பல நூல்களை உரையுடன் வெளியிடுதல் பெரிதும் அவசியமான நற்பணியாகும்.

மழைப் பாட்டு எனும் அரிய நூலின் மறுபதிப்பும் சென்னையில் நடந்த இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டில் வெளியிடப்பட்டது. அதிராம்பட்டினம் சொர்ண கவி நெயினு முஹம்மது பாவாப் புலவர் பாடிய இனிமையான இந்நூலில் வரட்சிக் காலத்தில் மழை பொழியக் கோரி அல்லாஹ்விடம் துஆக் கேட்பதற்காக கவிஞர் நெஞ்சுருகிப் பாடியுள்ளார்.


சிறுப்புராணம் சென்னை அங்கப்ப நாயக்கன் தெரு 30-ம் இலக்கத்திலுள்ள திரீயெம் பப்ளிஷர்ஸ், 1974-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சிறுப்புராணம் மூலநூல் முழுவதையும் பிரசுரித்து, அரிய சாதனை ஒன்றை நிலைநாட்டினர். ''அண்மைக் காலத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின்பால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆர்வம், சிறு போன்றதொரு தலையாய காப்பியத்தின் மூலநூல் கூடக் கிடைக்காவிடின், மீண்டும் தணிந்து விடுமோ என்று அஞ்சியதால்'' இப்பாரிய பணியை ஏற்றதாக நன்றியுரையில் அவர்கள் கூறியுள்ளனர். இது போன்று, ஏனைய பிரசுர நிலையங்களும் அக்கறையுடன், பழைய இலக்கியங்களை வெளியிட முன்வர வேண்டும்.

உமறுப் புலவரின் அரிய காவியத்தை கவிஞர் நாச்சிகுளத்தார் (எம். முஹம்மது யூசுப்) பதிப்பித்துள்ளார். இதில் சிறுவின் மூலம் மட்டும், எல்லாப் பாட்டுக்களும் சீர் பிரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன. முன்னைய பதிப்புக்கள் எதிலுமே இப்படிச் சீர் பிரிக்கப்பட்டில்லை. பெரும்பாலும் அவை வசன நூல் போல் வரிசையாகவும், வரிவரியாகவும் அடுக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன. சில அரபுச் சொற்களின் தமிழாக்கம் நூலின் முன் பகுதியிலும், பதினொரு பக்கங்களின் அருஞ் சொல் உரை நூலின் பிற்பகுதியிலும் உள்ளன. மூன்று காண்டங்களில், 92 படலங்களையுடைய சீறுவில் மொத்தம் 5,027 விருத்தங்கள் இருக்கின்றன. சீறுவின் பத்துப் பதிப்புகள் மட்டில், இதுவரை வெளிவந்துள்ளன. புலவர் நாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷெய்கப்துல் காதிர் நயினுர் லெப்பை ஆலிம் அவர்கள் முதன் முதலாக சீருவைப் பதிப்பித்து, அச்சிட்டார்கள். அவர்கள் வெளியிட்ட இரண்டாவது பதிப்பு செம்மையாக அமைந்திருந்தது. இஸ்லாமிய புத்தகப் பரிபால சபைத் தலைவராயிருந்து, இஸ்லாமிய இலக்கியங்களை அச்சிட்டுப் பிரசுரித்த கண்ணகுமது மகுதூம் முஹம்மது புலவர் அவர்களும், பின்னர் சீருவின் பல பதிப்புக்களை வெளியிட்டார். கோட்டாறு, சதாவதானி கா. ப. ஷெய்குத் தம்பிப் பாவலரும் சிருப் பதிப்பொன்றை மேற்கொண்டு, பிரசுரித்தார்.

கவிஞர் நாச்சிகுளத்தார் தனது பதிப்புரையில் கூறும் கருத்தொன்று கவனிக்கத் தக்கதாகும். ''இவ்விலக்கியங்கள் பதிப்பிப்பதன் நோக்கம், பணம் திரட்டுவதன்று. இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் செல்வங்கள் வெளிவந்து, தமிழுலகிற்கு மீண்டும் அறிமுகமாக வேண்டும். தமிழிலக்கியம் வளம்பெற வேண்டும்''.




சிருப்புராணம், சாதாரண மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறுவதற்கான முயற்சியை கலைமாமணி டாக்டர் கவி கா. மு. ஷெரீப் அருமையான முறையில் மேற்கொண்டுள்ளார். ''பிறை'' மாதச் சஞ்சிகையில் தொடராகக் கட்டுரைகள் எழுதி, சிறு விருத்தங்களுக்கு நல்ல விளக்கம் கொடுத்து, படிப்பவர் மனதில் பதியும்படி செய்கிறுர். இது தவிர, புதுவை வாஞெலி நிலையத்தில் 1980ல் அவர் தொடர்ந்து நிகழ்த்திய முப்பத்தொரு சொற்பொழிவுகள் ''சீருப்புராணச் சொற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிவு'' எனும் பெயரில், நூலுருவில் வெளிவந்துள்ளது. 1989-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரசுரமான ''சீறாப்புராணச் சொற்பொழிவு'' சென்னை, பச்சையப்பச் செட்டித்தெரு 21-ம் இலக்கத்திலுள்ள சீதக்காதி நூல் வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. ''பிறை'' ஆசிரியர் ஆலிஜனாப் மௌலவி எம். அப்துல் வஹ்ஹாப் எம். ஏ., பி.டிஎச். அவர்கள் வழங்கிய அணிந்துரையில் ''ஒழுக்க இயலை, நபிகள் பெருமானாரை அழகிய முன்மாதிரியாகக் கொண்டு அவர்கள் தம் திருவாழ்வை நிலைக்களனாக வைத்து அழகு தமிழில் அருமையாக எடுத்துக் கூறும் இச்சிறப்பு நூல், கலைமாமணியவர்களுக்கு ஒரு வெற்றி நூல்'' எனக் குறிப்பிடுவதிலிருந்து இந்த நூலை எத்தகையதென மதிப்பிட முடியும்.

மாத சஞ்சிகையில் கட்டுரைகள் எழுதியும், வானொலியில் சொற்பொழிவு நிகழ்த்தியும், சொற்பொழிவுகளை நூலுருவில் கொண்டுவந்துமுள்ள கலைமாமணி ஷரீப், தற்பொழுது பாரிய பொறுப்பொன்றை ஏற்றுள்ளார். சீறாப்புராணத்தின் விருத்தம் ஒவ்வொன்றுக்கும் பதவுரை, கருத்துரை, விளக்கவுரை எழுதி, விருத்தம் கூறுவதன் சாராம்சத்தையும் கடைசியில் சொல்லி, புத்தகமாக வெளியிட ஆரம்பித்துள்ளார். நுபுவ்வத்துக் காண்டத்திலேயே இப்பணி தொடங்கப்பட்டுள்ளது. சுமார் ஐந்நூறு பக்கங்களைக் கொண்ட மூன்று தொகுதிகளாக நுபுவ்வத்துக் காண்டத்துக்கான முழு உரை அடங்கிய நூல்கள் வெளிவந்து விட்டன. அடுத்து, ஹிஜ்றத்துக் காண்டமும், கடைசியில் விலாதத்துக் காண்டமும் இதே விதத்தில் முழு உரையுடன் வெளிவரவுள்ளன.

மேலும், சீறாப்புராணத்தின் பாடல்களை இசையருவி குமரி அபூபக்கர் என்ற சிறந்த பாடகர் இசையிட்டுப் படித்த பின்னர், கலைமாமணி அவர்கள் விளக்கவுரை கூறும் நிகழ்ச்சிகளும் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழகமெங்கும் நடைபெற்றுள்ளன. ஒவ்வொரு ஊரிலும் பத்து நாட்களுக்குக் குறையாமல் நிகழ்ச்சி நடைபெறுவதுண்டு. பொதுமக்களும், படித்த மேதைகளும் இந்நிகழ்ச்சிகளைப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்தெட்டு வயதான கா.மு. ஷெரீப் அவர்கள், தான் ''மேலும் வாழ்வதாயின், அது இஸ்லாமிய இலக்கியப் பணிக்காகத்தான் வாழ வேண்டும். அந்தப்பணி என்னால் நடக்க வேண்டுமென்றிருந்தால், அது முடியும் வரை எனது ஆயுளை முடிக்காமல் நீட்ட அவனாலாகுமே! ஆகவே, எதன் மீதும் அவாவுறாமல் என் போக்கில் பணியாற்றுகிறேன்'' என்று கூறுகிறார்கள். உலகப் பல்கலைக்கழகத்தினர், சென்ற ஆண்டு டிஸம்பர் மாதம் 25-ம் திகதி நடத்திய விழாவொன்றில் இவருக்கு டாக்டர் ஒப் லிட்டரேச்சர் (இலக்கியக் கலாநிதி) பட்டத்தை வழங்கினர்.

1981-ம் ஆண்டின் டிஸம்பர் மாத ''முஸ்லிம் முரசு'' கவி கா. மு. ஷெரீப் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளது: கலைமாமணி கவி கா. மு. ஷரீப் நல்ல மேடைப் பேச்சாளர். பெரும்பாலும் அரசியல் மேடைகளிலேயே பேசிப் பழக்கப்பட்ட இவர், இப்போது அரசியல் ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டு, சமுதாய மேடைகளில் பேச்சைத் தருகிறார். முழுக்கவே இப்போது ஆன்மீகத் துறையிலேயே பற்றுக் கொண்டு பேனாவை ஓட்டுகிறார். திரைப்படப் பாடலாசிரியராகப் பிரபலம் பெற்ற கலைமாமணி அவர்கள் இப்போது சீறாப்புராணம் பாடல்களுக்கு பதவுரை எழுதும் மிகமுக்கியமான அரிய பணியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்க செய்தி. விரைவில், சீறாப்புராணம் முழு உரையுடன் வெளிவர விருக்கின்றது'' ''கவி கா. மு. ஷெரிபின் கவிதைகள்'' என்ற தலைப்பில் டாக்டர் வீ. ஞானசிகாமணி அவர்கள் எழுதிய ஆய்வுரை ''இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்'' என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக 1974-ம் ஆண்டில் பிரசுரமான நூலில் இடம் பெற்றுள்ளது. 572 பக்க அளவிலான இந்த நூலை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி, பதிப்பித்து வெளியிட்டார். டாக்டர் வீ. ஞானசிகாமணி எழுதியுள்ள ஆய்வுரையின் முதல் வாக்கியம் இதுதான்: ''கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் அடிமை இந்திய மண்ணில் வாழ்ந்தவரும், விடுதலை பெற்ற இந்திய மண்ணில் வாழ்கின்ற பேறு பெற்றவருமான ஓர் ஒப்பற்ற இசுலாமியக் கவிஞராவர்''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமாமணி கா. மு. ஷெரீப் தமிழரசுக் கழகத்தின் மூத்த தளபதியாக முப்பதாண்டுகளுக்கு முன்பு இருந்துள்ளார். ''தமிழ் நாடு சட்ட மேலவையின் இன்றைய மாண்புமிகு தலைவராய்த் திகழும் சிலம்புச் செல்வருக்கு அந்நாள் ஆற்றல் மிக்க வலதுகரமாய் விளங்கிய பெருமை கவி கா. மு. ஷெரீப் அவர்கட்கு உண்டு. அந்நாளிலேயே தன் தனி (சுயமான) ஆய்வுத் திறனும் எழுத்துத் திறனும் பேச்சுத் திறனும் செயல் திறனும் படைத்து விளங்கினார்கள் நம் கவிஞர் பெருந்தகை... அறுபத்தாறுண்டுகள் அனுபவம் பெற்ற அறிஞர்'' என்று உயர்திரு. சிந்தனைச் செம்மல் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

கலைமாமணியின் நூல்கள் பற்றிய விபரம்: ஏழு கவிதை நூல்கள் *[1]* ஒளி *(1946), [2]* இன்றைய சமுதாயம் *(1951), [3]* அமுதக் கலசம் *(1964), [4]* நபியே! எங்கள் நாயகமே *(1972), [5]* இறையருள் வேட்டல் *(1978), [6]* ஆயிஷா நாச்சியார் பிள்ளைத் தமிழ் *(1979), [7]* மச்சகந்தி *(1972),* மகளே கேள் என்ற கட்டுரை நூல், மூன்று சிறுகதைத் தொகுதிகள்—*[1]* காதல் வேண்டாம், *[2]* காதலும் கடமையும், *[3]* கனகாம்பரம், மூன்று புதினங்கள்—*[1]* நல்ல மனைவி, *[2]* விதியை வெல்வோம், *[3]* தஞ்சை இளவரசி. மூன்று நாடகங்கள்—*[1]* புது யுகம், *[2]* மன்னவன் காதலி, *[3]* பாசம் தந்த பரிசு.

டாக்டர் சஞ்சீவி மேலும் சொல்லுகிறார் : ''அரசியல்—அதுவும் திரு. வி. க. பாடியது போலக் கொள்ளை எரி அரசியல்! அவாக்கள் அறும்போது முதலில் இலக்கியத்திலும் பின்னர் அதையும் கடந்த ஆன்மீகத்திலும் மனித மனம் ஈடுபாடுகளைத் தேடுவது இயற்கை. முதிர்ச்சியின் வளர்ச்சி முத்திரை இது. அண்மைக் காலத்தில் கவி கா. மு. ஷெரீப் சீறாப்புராணச் சொற்பொழிவுகளில் செறித்திருப்பது நாடு செய்த நற்றவம்; தமிழ் செய்த தவப்பயன்''. சீறாப்புராணத்தைச் சிறப்பான முறையில் பிரபல்யப்படுத்தி, எளிதில் விளங்கித் தெரிந்து கொள்வதற்கு உதவுகின்ற பெரியாருக்கு தமிழகம் என்றுமே பாராட்டுத் தெரிவிக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜநாயகம் :

சீறுவுக்கு அடுத்தபடியாக தமிழ் இனிமை கொண்ட காவியம் இராஜநாயகம். வண்ணக்களஞ்சியப் புலவர் ஹிஜ்ரி 1223-ம் ஆண்டில் (சுமார் நூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன்பு) இக்காவியத்தை எழுதினார். சீறாப்புராணத்திற்கு ஒன்றரை நூற்றாண்டுக்காலம் பிந்தியதான இக்காவியம் எளிமையானதாக அமைந்துள்ளது. அரசராகவும் அல்லாஹ்வின் தூதராகவும் இருந்த சுலைமான் நபி (அலை) அவர்களே காவிய நாயகர். அவர்களின் வரலாற்றை விளக்குகின்ற இக்காவியத்தையும் கவிஞர் நாச்சிகுளத்தார் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

1976-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் நடைபெற்ற பாராட்டு விழாவின் போது வெளியிடப்பட்ட கலாநிதி உவைஸ் மலர் அனுபந்தமாக நாகூர் தர்கா மகா வித்துவான் குலாம் காதிறு நாவலர் இயற்றிய பொருத்த விளக்கம், பிரசுரமாகியுள்ளது. 1900-ம் ஆண்டில், முதலில் அச்சான இந்நூலுக்கு இலக்கணக் கடல் ஆ. கா. பிச்சை இபுறுஹீம் புலவர் உரை எழுதியுள்ளார்.

மறுபதிப்புக்கள் சிலவற்றைப்பற்றி, இதுவரை பார்த்தோம். இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாயமைந்த ஏனைய வழிகள் என்னென்ன என்பதையும் சுருக்கமாகக் கவனிப்போம்.

நவீன காவியம்......ஏனைய படைப்புக்கள்

டி. எம். எம். அஹ்மது என்ற இயற் பெயரையுடைய காரணபாஸ்கரன்தான் இக்கால கட்டத்தில் முதலாவது காவியம் எழுதியுள்ளார். கூத்தா நல்லூரில் வாழ்ந்த முஸ்லிம் தமிழ்ப் பெரியாரான ஆத்தர் முஹம்மது இப்ராஹீம் சாஹிபிடம் இலக்கண, இலக்கியங்களையும், பாட்டியலையும் கற்ற இவர், அவருடைய புதல்வியையே மணம் செய்து கொண்டார். ஓராண்டு காலம் வாழ்ந்த இந்த மனைவி பல்கீஸ், இறையடி சேர்ந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் இவர் எழுதிய ''யூஸுப்—சுலைகா'' காவியத்தை ''விண்ணகம் புகுந்த மனைவி பல்கீஸின் விருப்பினுக்கு சமர்ப்பணம்'' செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957-ம் ஆண்டில் முதற் பதிப்பு கண்ட 'யூசுப்—சுலைகா' இதுவரை நான்கு பதிப்புகளில் வெளிவந்து விட்டது. 1980-ம் ஆண்டின் கடைசியில் வெளியான நான்காம் பதிப்பில்தான் நூலின் இரண்டாம் பாகம் இடம் பெற்றுள்ளது. 43 இயல்களைக் கொண்டு 230 பக்கங்களில் முதல் மூன்று பதிப்புகளிலும் வந்த முதல் பாகத்தில், யூசுப்—சுலைகா திருமணம் வரை மாத்திரமே கூறப்பட்டது. மேலும் இருபத்திமூன்று இயல்களில் மொத்தம் அறுபத்தாறு இயல்களைக் கொண்டதாக, 322 பக்கங்களில் இரண்டாம் பாகத்துடன் முழு நூல், வெளிவந்துள்ளது. இரண்டாம் பாகம் திருமணத்திற்குப் பிந்திய நிகழ்ச்சிகளைக் கூறுகிறது.



சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு எம். எம். இஸ்மாயில் அவர்கள் மூன்றும் பதிப்பிற்கு வழங்கிய அணிந்துரையில், நூலை மதிப்பிட்டுள்ளார்கள்; ''...இந்தக் காப்பியம் முழுவதிலும் அவரது கவித்திறன் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. ஆண்டிருக்கும் சொற்கள் மிக எளியவை. நடை மிகத் தெளிவாக, சரளமாக, ஆற்றொழுக்கு போல் அமைந்திருக்கிறது. எந்த ஒரு சொல்லின் பொருளையும் தெரிந்து கொள்ள அகராதியைப் புரட்டத் தேவையே இல்லை. அத்தகைய எளிய சொற்களாக, மிக ஆழ்ந்த உணர்ச்சிகளையும் மிகத் தெளிவாய்ச் சித்திரித்துக் காட்டி விடுகிறார் கவிஞர்.'' முற்றிலும் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்ட இக்காவியத்தைப் பற்றி அவர் தொகுத்துக் கூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில், ''இது மொழியால் தமிழ்க் காப்பியம், உணர்ச்சி யினுல் காதற் காப்பியம், பண்பினுல் மனிதக் காப்பியம், போதிக்கும் அறத்தினுல் அமரகாவியம்'' என விவரித்துள்ளார். ''யூசுப்-சுலைகா'' இலங்கையில் பாடப் புத்தகமாக இடம் பெற்றிருந்தது. கல்வித் தராதரப் பத்திர உயர்தர இலக்கிய பாடம் படித்தவர்கள், இதனைப் பல வருடகாலம் பாவித் தார்கள்.

மணியோசை, சாபம், சங்கநாதம், இதயக் குமுறல், நாடும் நாமும், மணிச்சரம் ஆகிய பாடற் தொகுதிகள் சாரண பாஸ்கரனுரின் ஏனைய படைப்புக்கள். ''பாலயோகியின் பிரார்த்தனை'' என்ற இவரின் நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**அல்ஹாஜ் மௌலவி பாஸில் ஜி. எம். எஸ். ஸிராஜ் பாக்கவி** எழுதியுள்ள ''நெஞ்சில் நிறைந்த நபிமணி'' இக்காலத்தின் மற்றைய காப்பியம் எனக் கொள்ளலாம். பெருமானுர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முழுவதையும், எளிய, இனிய கவிதையில் இந்நூல் கூறு கிறது. அவர்களின் பொன்மொழி களும், இஸ்லாத்தின் சிறப்பியல்பு களும் இந்நூலில் இடம் பெற்றுள் ளன. மொத்தம் 3663 அறுசீர் பாக்களைக் கொண்டது இந்நூல். கவிஞர் திலகம் சாரணபாஸ் கரனுர் கருத்துப்படி, இது ''சாதா ரணமானவர்கள் துணியக் கூடிய காரியமன்று. இத்தகைய சிரமமான பணியை இறை



வனின் தனிப்பெரும் துணைகொண்டும் எம்பெருமானுர் நபி கள் நாயகமவர்களின் நல்லாசி கொண்டும் முயன்று, தம் நெஞ்சில் நிறைந்த நபிமணி அவர்களை நம் நெஞ்சில் நிறுத்தி வைப்பதில் வெற்றி கண்ட என் அருமை நண்பர் பாக்கவி யார் பாராட்டுக்குரியவராகின்றுர்''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை மாவட்டத்திலுள்ள கீரனூரில் 1924ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 24ம் திகதி பிறந்த சதகதுல்லாஹ் ஸிராஜ் அவர்கள், கீரனூர் உயர்நிலைப் பள்ளி, கூனூர் புனித அந்தோனியார் உயர் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பக் கல்வி பெற்றார். பின்பு, வேலூரிலுள்ள பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபிக் கல்லூரி, சென்னை ஜெமாலியா அரபிக் கல்லூரி ஆகியவற்றில் சேர்ந்து பல ஆண்டுகளாக அரபி பயின்று மௌலவி ஆலிம், மௌலவி பாஸில் காரி என்ற பட்டங்களைப் பெற்றார். 1960ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில், இவர் எழுதிய 'அறிவமுதம்' எனும் நூல் வெளியானது. அதே ஆண்டு, செப்டம்பர் மாதத்தில் ''இன்பமாக வாழ்வது எவ்வாறு?'' என்ற நூல் பிரசுரிக்கப்பட்டது. இல்லற வாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களைப் பற்றி இந்நூல் இனிய தமிழில் கூறுகிறது. ''ஸுபுஹான மவ்லித்'' கருத்துக்களை, தமிழ்க் கவிதையாகப் பாடிய நூலும் இவர்களால் எழுதப்பட்டதாகும்.

ஆர். பி. எம். கனி அவர்கள் பல அரிய நூல்களை இயற்றித் தந்துள்ளார். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இரவண சமுத்திரம் என்ற ஊரைச் சேர்ந்த இவர், ஹாஜி‌ஃபால் முஹம்மது சாஹிபின் மூன்றாவது புதல்வராக 7. 12. 1920ல் பிறந்தார். தென்காசி உயர்நிலைப் பள்ளியிலும், நெல்லை இந்துக் கல்லூரியிலும் படித்த பின்னர், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்து, வக்கீலானார். எனினும் இலக்கியத்திலும் எழுத்துத் துறையிலுமே அவர் கூடுதலாக ஈடுபட்டு வந்துள்ளார். அச்சில் வெளிவந்த இவரின் முதல் புத்தகம் ''ஜனாப் ஜின்னாஹ்'' என்ற பெயரில் 1940ல் வெளியானது. ஜனாப் ஜின்னாஹ்வின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமே இந்நூல். பின்னர், 1945ல் விரிவான இலக்கிய நூல் ''அல்லாமா இக்பால்'' வெளியானது.

1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கி, சிங்கப்பூர் ''மலேயா நண்பன்'' தினசரி, வாரப் பதிப்புகளின் ஆசிரியராக இருந்தார். பின்னர், சில காலம் சென்னையில் பிரசுரமான ''முஸ்லிம்'' தினசரியின் ஆசிரியராயிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌதுல் அஃலம் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாலு பாகங்களாக ஜுனைப் கனி எழுதி வெளியிட்டுள்ளார். வேறு பல மேதைகளின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர் எழுதியுள்ளார்.



ரிபாயி ஆண்டகை, ஹஜ்ரத் குத்புல் ஹிந்த், ஷாதுலி நாயகம், மகான் ஷைகு ஷஅதி, அல்லாமா ஷிப்லி ஆகியன இவரின் வரலாற்று நூல்கள். பதின்மூன்று கவிஞர்களின் சரிதை ''பாரஸீகக் கவிஞர்கள்'' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. 'இமாம்கள் சரிதை' என்ற பெயரில் நான்கு இமாம்களுடைய சரிதைகள் வெளிவந்துள்ளது.

''இக்பால் கவியமுதம்'' இவர் எழுதிப் பிரபல்யமான மற்றுமொரு நூல். அறிஞர் மு. கரீம் கனி எழுதிய 'ஜோதி' 'சந்நிதானம்' ஆகிய இரண்டையும் தமிழ் நாட்டில் மலிவுப் பதிப்பாக இவர் வெளியிட்டார். ''முஸ்லிம் பெண்கள்'' என்ற பெயரில் எழுதப்பட்ட நூலில் முஸ்லிம் பெண்கள் பற்றிய பல்வேறு அம்சங்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவர் எழுதிய நூல்களிலெல்லாம் தன்னைக் கவர்ந்தது இந் நூல்தான் என்று ஜுனைப் கனி கூறுகிறார். ''இஸ்லாமிய சமையல் கலை'' பற்றிக்கூட அவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். முதன்முதலில் 1956ம் ஆண்டில் அச்சாகி, இதுவரை ஆறேழு பதிப்புக்களைக் கண்டுவிட்ட அவரின் ஔராதுத் தொகுப்பு மிகப் பிரபல்யமான, பயனுள்ளதொரு நூல்.

தான் புத்தகம் எழுதத் தொடங்கிய பின்னணியை ஜுனைப் கனி இவ்வாறு கூறுகிறார்: ''ஆறு குழந்தைகளுக்குத் தந்தையாகி உள்ள நான் இன்று, ஐம்பது நூற்களுக்கும் தந்தையாக இருக்கிறேன். எனது நூல் ஒவ்வொன்றும், நான் அறிந்து கொள்வதற்காக ஆரம்பித்து, அதை மற்றவர்களுக்கும் தெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் நூலுருவானவை''. நூல் வெளியிடுவது பற்றி அவரின் கருத்து: பொருளாதார அடிப் படையில் அவை வெற்றி என்று சொல்ல இயலாவிடினும், மன நிறைவைத் தரும் சஞ்சீவியாக அவை திகழ்கின்றன.''

அல்ஹாஜ் எம். ஆர். எம். அப்துற் றஹீம், பி.ஏ. முதலில் பல்வேறு அறிஞர்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாறு களை எழுதினர். ''அரேபியாவின் அதிபதி'' என்ற பெயரில் காலஞ் சென்ற இப்னு ஸஊத் மன்னரின் வாழ்க்கையைப் பற்றியதே இவரின் முதல் நூல். பின்பு, ''இஸ்லாமிய திலகங்கள்'' ''முஸ்லிம் சமுதாயச் சிற்பிகள்'' ஆகியன வெளிவந்தன. வரலாற்றுத் துறையில் மேலும் ''முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்'' என்ற அரிய நூலையும் ஹாஜி றஹீம் எழுதியுள்ளார். படிப்பவர் மனதில் ஆர்வமூட்டும் விதத்தில் இந்தச் சிறந்த நூல் அமைந்துள்ளது.



வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கு வழி காட்டக் கூடிய நூல்களையும் அப்துற் றஹீம் எழுதியிருக்கிறார். இந்த வகையில் முதன்முதலில் வெளியான நூல் ''வாழ்க்கையில் வெற்றி'' தொடர்ந்து, 'முன்னேறுவது எப்படி?,' 'கவலைப் படாதே!' 'வாழ்வைத் துவங்கு', 'சுபிட்சமாய் வாழ்க!', 'வாழ்வது ஒரு கலை' போன்ற பல நூல்கள் வெளிவந்தன.

'வியாபாரம் செய்வது எப்படி?', 'மருத்துவ மன்னர்கள்' போன்ற வெவ்வேறு துறைகளைச் சார்ந்த நூல்களையும் வெளியிட்டதோடு, பிரஞ்சு நாவலாசிரியரான அலெக்ஸாந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டூமாஸ் வரலாறு, சீனப் பெண்மணி ஹேஸல்லின் எழுதிய நாவலின் மொழிபெயர்ப்பான ''வாழ்வரசி'' போன்ற பல் வேறு வகை நூல்களையும் தந்துள்ளார்.

''நபிகள் நாயகம்'' என்ற இவரின் அரிய படைப்பு, அல்ஹாஜ் எம். எம். உவைஸினால் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நபி பெருமானாரின் ஹதீஸ் பேழை யும் இவரால் வெளியிடப்பட்டுள்ளது.

பன்னூலாசிரியரான இவரின் எழுத்துப் பணிக்குக் கிரீட மாய் அமைந்துள்ள ''இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்'' மூன்று பாகங்களில், சமீப காலத்தில் பிரசுரமானது.

ஸையித் இப்ராஹீம், எம். ஏ., எல். ரி. முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, நாலு கலீபாக்கள் ஏனைய பல முஸ்லிம் பெரியார்கள் பற்றிய நூல்கள் முதல், இஸ் லாமியக் கதை விருந்து, முஸ்லிம் கதைக் கொத்து போன்ற சிறுவர்க்கான பல நூல்களையும் எழுதியுள்ளார். குர்ஆன் மணி மொழிகள், நபி நாயக நல்லுரைகள், வளர்மதி நீதிக் கதைகள் போன்ற ஐம்பதுக்கும் அதிகமான நூல்களை இயற் றிய ஸையித் இப்ராஹீம் திருச்சி ஜமால் முஹம்மத் கல்லூரி யில் பணி புரிந்தார். சமீபத்தில், இறையடி சேர்ந்து விட்டார்.


ஸையித் இப்ராஹீம் எழுதிய ''முஹம்மத் (ஸல்)'' 'உலகம் போற்றும் உத்தம நபி', 'அண்ணல் நபி' ஆகிய மூன்றும் சிறுவர்களும் படிக்கத்தக்க எளிமையுடன் திகழ் கின்றன என்று ஆர். பி. எம். கனி கூறியுள்ளார்.

இஸ்லாமியச் சிறுகதைகள் பற்றி ஜே. எம். ஸாலிஹ், எம். ஏ. 1974ம் ஆண்டு ஜுலை மாதத்தில் வெளியான ''மணி விளக்கு'' சஞ்சிகையில் எழுதியுள்ளார். 1950லிருந்து 1960 வரையிலான பத்தாண்டு காலச் சிறு கதைகள் பற்றியே அவர் மதிப்பிட்டுள்ளார். 1974ம் ஆண்டு ஜுன் மாதம் 9ம் திகதி, சென்னையில் நடைபெற்ற இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டின் இரண்டாவது நாள் ''தற்கால இலக்கியம்'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிலும், அவர் ''கதை'' பற்றி உரை நிகழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இஸ்லாமியச் சிறுகதைகள் பற்றி ஈழத்தின் தலைசிறந்த இஸ்லாமிய இலக்கிய விமர்சகர் அ. ஸ. அப்துஸ் ஸமத் மதிப்பீடு செய்துள்ளார். பல சிறு கதைகளை எழுதியுள்ள இலக்கியப் படைப்பாளியான அவர், 1979-ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற நாலாவது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டின்போது தொகுத்து வெளியிட்ட 'பிறைப் பூக்கள்' எனும் சிறு கதைத் தொகுதியில் பதினொரு பக்கங்களைக் கொண்ட விரிவான ''முன்னீடு'' இடம் பெற்றுள்ளது. 185 பக்கங்கள் கொண்ட ''பிறைப் பூக்கள்'' இருபத்தேழு சிறுகதைகளை உள்ளடக்கியிருக்கிறது. பல வருட காலம் ஆசிரியராகக் கடமை புரிந்துள்ள அ. ஸ. அப்துஸ் ஸமத், பி. ஏ. (சிறப்பு), இன்று ஆசிரியர்களுக்கு ஆசானாக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகப் பணி புரிகிறார். கணிசமான நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.



ஆர். பி. எம். கனியின் இஸ்லாமிய இலக்கியக் கருவூலம், 229ம் பக்கத்தில் இவரைப் பற்றித் தரும் குறிப்பு வருமாறு: ''..அ. ஸ. அப்துஸ் ஸமதுவின் சேவை சிறப்புடையது. கடந்த கால இஸ்லாமிய இலக்கியங்களின் மணத்தை இக் காலத்துக்கு ஏற்ற முறையில் பரப்ப இவர் பெரிதும் பாடு பட்டுள்ளார். 'சீறா இன்பம்', 'சுலைமான்-பல்கீஸ்' போன்றன இவருடைய இலக்கிய நயம் விளக்கும் நூற்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் பள்ளி மாணவர்களுக்கு 'இலக்கியப் பொய்கை' என்ற வரிசையில் பாடப் புத்தகங்கள் எழுதியிருக்கிறார். அவற்றில் இஸ்லாமிய இலக்கிய மணம் கமழ்கிறது''.

நாலாவது மகாநாட்டின் போது வெளியிடப்பட்ட ''பிறைத்தேன்'' கவிதைத் தொகுதியில் பேராசிரியர் ம.மு. உவைஸ், கவிதைகளின் போக்குப் பற்றிச் சுருக்கமாக எழுதியிருக்கிறார். கவிஞர் எம். சி. எம். ஸுபைர் தொகுத்த ''பிறைத்தேன்'' முப்பதுக்கு மேற்பட்ட கவிஞர்களின் படைப்புக்களைத் தாங்கி வந்துள்ளது. நாலாவது மகாநாட்டின் போது, கட்டுரைகளின் தொகுப்பொன்றும் வெளியிடப்பட்டது. பிறைக் கொழுந்து எனத் தலைப்பிடப்பட்டுள்ள இத்தொகுதியின் பதிப்பாசிரியர் பேராசிரியர் கலாநிதி ம. மு. உவைஸ். இருபத்தேழு கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

''பிறைக்கொழுந்து'' 109ம் பக்கத்தில் கலைமாமணி டாக்டர் கவி கா. மு. ஷெரீப் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதை நாம் கவனித்தல் வேண்டும். ''தமிழ் வளர்ச்சிப் பணியில் இஸ்லாமியர் பங்கு அளப்பரியதாகும். இதனை அறியாதார் 'முஸ்லிம்கட்கும் தமிழுக்கும் என்ன சம்பந்தம்?' என்று கேட்கின்றனர். இது அவர்கள் குற்றமன்று. நாம் நம் சாதனைகளை சரியானபடி விளக்கவில்லை, விளம்பரப்படுத்தவுமில்லை. இது விளம்பரயுகம். நாம் ஓய்ந்திருந்தால் வலுவுடையோர் நம்மை வாயடைக்க வைத்து விடுவார்கள். எனவே, நாம் நம் சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்ட வேண்டியுள்ளது''.

எவ்வளவு உண்மை நிறைந்த வாக்கியங்கள். இதன்படி, பத்திரிகைகள், சஞ்சிகைகளில் கட்டுரைகள் எழுதியும், நூல்களை வெளியிட்டும் எமது சாதனைகள் பற்றி எடுத்துக்கூற வேண்டிய பெரும் பொறுப்பு முஸ்லிம் இலக்கியக் கர்த்தாக்கள் தலையில் சுமத்தப்பட்டுள்ளது.

இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சிக்கென நாலு மகாநாடுகள் நடாத்தப்பட்டுள்ளன. இலங்கையில் இஸ்லாமிய இலக்கியங்கள் பாட நூல்களாக்கப்பட்டிருக்கின்றன.

இவை பற்றிய விபரங்கள் ''உத்தமர் உவைஸ்'' என்ற நூலில் இடம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபகால விழிப்புணர்ச்சியின் காரணமாக, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய இலக்கிய ஆய்வுக்கான துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது சிறந்த சாதனையாகும். இதற்குப் பொறுப்பானவர்கள் அனைவர்க்கும், உலக முஸ்லிம்கள் கடமைப்பட்டுள்ளனர்.

மதுரையில், 1950ம் ஆண்டுக்கு முன்பு தோன்றிய இஸ்லாமிய இலக்கியங்களின் வரலாறு எழுதப்படுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு எழுதப்பட்ட பல்சந்த மாலையின், கிடைத்துள்ள எட்டுக் கவிதைகள் பற்றி ஆராய்வதுடன் இஸ்லாமிய இலக்கிய வரலாறு தொடங்குகிறது. பதினைறும் நூற்றாண்டளவில் வெளியான ''யாகோபு வைத்தியம்'' எனும் நூல் பற்றியும் அங்கு ஆராயப்படுகிறது. இராம தேவர் என்ற சித்தர் சதுரகிரி எனும் ஊரில் வாழ்ந்து வந்த போது, மக்காவில் இஸ்லாம் பரவியது பற்றிக் கேள்விப்பட்டு, தனது வைத்திய அறிவை மேலும் விருத்தி செய்யும் நோக்குடன் மக்கா சென்று இஸ்லாமிய வைத்திய முறைகளை விசாரித்தறிந்ததுடன் இஸ்லாம் சமயத்தையும் தழுவினர். அதன் பின்பு அவரின் பெயர் யாக்கூப் என வழங்கலாயிற்று. யாக்கூப் சித்தர் எழுதிய ''யாகோபு வைத்தியம்'' எனும் நூல், இன்றும் பயன்படுத்தப்படுகிறது. அவர் இஸ்லாத்தை ஏற்ற பின்னர் சித்தர் வாழ்ந்த ஊரின் பெயர் துலுக்க மொட்டை என்று ஆகியது. இவ்வாருன பழைய சம்பவங்கள் பற்றியெல்லாம் மதுரையில் விரிவாக ஆராயப்படுகிறது.

இது தவிர, இஸ்லாமிய இலக்கியத்தில் காணப்படுகின்ற அரபு, பாரசீக மொழிச் சொற்களின் அகராதியொன்றும் தொகுக்கப்பட்டுள்ளது. தட்டச்சில் 375 பக்கங்களைக் கொண்ட இந்த அகராதி, சென்னையில் திரீயெம் பப்ளிசர்ஸாரால் அச்சிடப்படுகிறது.

இதுவரை நாலு ஆராய்ச்சி மகாநாடுகள் நடாத்தப்பட்டுள்ளன. ''உத்தமர் உவைஸ்'' ஒன்பதாம் அத்தியாயத்தில் மகாநாடுகள் பற்றிய முழு விவரங்களும் 58ம் பக்கத்தில் தொடங்கி இருபத்தி நாலு பக்கங்களில் தரப்பட்டுள்ளன. மகாநாடுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், அவற்றின் அமுலாக்கம் பற்றிய விபரங்களையும் அந்நூலின் ஒன்பதாம் அத்தியாயம் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இஸ்லாமிய இலக்கியங்கள் அரசாங்கப் பரீட்சைகளுக்குப் பாட நூல்களாக அங்கீகரிக்கப்பட்டதன் விபரம் 'உத்தமர் உவைஸ்' ஆறும் அத்தியாயத்திலுள்ளது. இதற்கான முயற்சி ஒரு சுவையான பின்னணியைக் கொண்டதாகும். இதற்கென கலாநிதி ம. மு. உவைஸ் அவர்கள் எடுத்த முயற்சிகள் பல; அவர் எதிர்நோக்கிய இன்னல்களும் பல.

எதிர்கால நலனுக்காக...

தற்கால இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றி எதிர்கால நலனுக்காகவும், இன்றைய சமுதாயம் படித்தறிவதற்காகவும் விரிவான அடிப்படையில் நூல்கள் வெளிவருதல் மிக அவசியம். 1950லிருந்து பத்தாண்டு, பத்தாண்டுகளுக்குத் தனித் தனி நூலாக எழுதப்படுதல் நல்லது. தென்னக, இலங்கை இலக்கியங்களெனப் பிரித்துக் காட்டாமல், இஸ்லாமிய இலக்கியம் என்ற பொது நோக்கில், வெவ்வேறு துறைகள் பற்றிய பிரிவுகளைக் கொண்டு இந்நூல்கள் அமைதல் சாலச் சிறந்ததாகும்.

திருச்சியில் நடைபெற்ற முதல் ஆராய்ச்சி மகா நாட்டில் பேராசிரியர் எஸ். அப்துல் றஹ்மான் தெரிவித்த கருத்துகள் இத்துறையில், மிகப் பயனுடையவையாகும். அவரின் உரை பற்றி ''இஸ்லாமிய இலக்கியத்தின் திருச்சித் திருப்பம்'' என்ற நூலின் 93ம் பக்கத்தில், பேராசிரியர் ம. மு. உவைஸ் பின்வருமாறு எழுதுகிறார்:

திருச்சி மா நகரில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருத்தரங்கு மாநாட்டில் ஆலோசனை அமைப்புக் கூட்டத்தில் கருத்துரை வழங்கியவர்களுள் பேராசிரியர் எஸ். அப்துல் றஹ்மான் என்பவரும் ஒருவர். இவர் வாணியம் பாடி இஸ்லாமியக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பழம் பெரும் எழுத்தாளரான மஹ்தி என்பவரின் புதல்வர். இளங்கலைத் தேர்வில் மாநில முதன்மைக்காகப் பல்கலைக் கழகத்தினர் வழங்கிய ஜி. யூ. போப் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றவர். அனைத்திந்திய வானொலி நிலையக் குடியரசு தினவிழாக் கவியரங்கில் தமிழகத்தின் சார்பில் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பெருமை பேராசிரியர் அப்துல் றஹ்மான் அவர் களையே சாரும். இவர் புகழ் பெற்றுவரும் சிறந்த நல்ல கவிஞர். நாவலர் கவிக்கோ என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் இவர் அன்று அங்கு இவ்வாறு கருத்துரை வழங்கினர்:

'இந்த அமைப்பு ஏற்படல் வேண்டுமென்பது என்னைப் போன்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய அடியார்களின் பெரு நாளைய ஆசையாகும். அந்த ஆசையும் கனவும் இன்றைக்கு நிறைவேறுகின்றது என்பதிலே என்னைப் போன்றவர்கள் மிக அதிகமாக மகிழ்ச்சியடைகிறுர்கள். அதற்காக உறுதுணையாக இருந்து இதனை மிகச் சிறப்பாகத் தொடக்கி வைக்கிற பணியைப் பேராசிரியர் மதிப்பிற்குரிய அப்துல் கபூர் சாகிப் அவர்களும், பேராசிரியர் நெய்னர் முகம்மது சாகிப் அவர்களும் நடத்தியிருக்கின்றனர் என்பதிலேயே இது மிகச் சிறப்பாக நடைபெறும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதற்கடுத்ததாகப் பிற நாட்டுடன் தொடர்புகள் கொள்வதற்கு அவர்கள் நிறைய வசதிகளும் வாய்ப்புக்களும் அளித்திருப்பதாக நான் கருதுகிறேன்.

முதன் முதலாக என்னைப் போன்ற கல்லூரி ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற மிகப் பெரிய சிரமம் இலக்கிய வரலாறு என்னுமொரு பாடமாகும். இத்தகைய ஒரு பாடம் இருக்கும் பொழுது அதிலே இஸ்லாமியப் புலவர்கள் பற்றி எழுதுகிற அன்பர்களெல்லோரும் ஒரே பக்கத்துக்குள்ளே அந்த வரலாற்றை எழுதி முடிக்கிறுர்கள். அப்படி எழுதும்பொழுது உமறுப் புலவர், மஸ்தான் சாகிபு என்னும் இரண்டே இரண்டு பேர்களை—அவர்களுக்குத் தெரிந்த இரண்டே இரண்டு பேர்களை மாத்திரம் சொல்லிவிட்டுப் போய் விடுகிறுர்கள்.

தவறை இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் மீது மாத்திரம் சுமத்துவதற்கு நான் தயாராயில்லை. அத்தகையோர் எழுத வேண்டுமென்னும் ஆசை உடையவர்களாயிருந்தாலும் கூட புலவர்கள் யார் யார் இருந்தார்கள், என்ன என்ன எழுதியிருக்கின்றுர்கள் என்பன போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்குரிய வசதியையும் வாய்ப்பையும் நாம் அவர்களுக்கு அளிக்கவில்லை என்பது எனது கருத்து. எனவே முறையான சில நூல்களை நாம் இன்னும் தயார் செய்ய வேண்டுமெனக் கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றி வெளி வந்துள்ள நூல்களைப் பற்றிக் குறிப்பிட்ட கவிக்கோ அப்துல் றஹ்மான் அவர்கள் மதிப்பிற்குரிய எம். ஆர். எம். அப்துல் றஹீம், பண்டிதர் பனைக்குளம் அப்துல் மஜீது, எம். எம். உவைஸ் ஆகியோர் இத்துறையில் எழுதிய நூல்களைக் குறிப்பிட்டார். இது பற்றி வானொலியில் நிகழ்த்தப்பட்ட கருத்துரைகளையும் அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

''இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றினைப் பற்றி மிகச் சிறப்பாகப் பணி புரிந்துள்ளனர் என்றாலும் கூட முறையாக முதலிலிருந்து தொடங்கி இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றினைப் புலவர்களுடைய வரலாற்றுடன் சேர்த்து அந்த நூல்களுடைய திறனாய்வுப் பார்வையில் எழுது தல் வேண்டும். இதனை மிக விரைவாக நாம் செய்து முடித் தல் வேண்டும். ஏராளமான எமது அன்பர்களிடத்தில் நம் முடைய இலக்கியங்கள் புதைந்து போய்க்கிடக்கின்றன. இஸ் லாமியத் தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றையுமே ஒரே தடவையில் பார்க்கக் கூடிய ஓர் அமைப்பிலே எல்லா நூல் களையும் வரவழைத்து இங்கு நாம் சிறந்த ஒரு நூல் நிலை யத்தை அமைக்க வேண்டும். ஆண்டுக்கொருமுறையோ கால் ஆண்டுக்கு ஒரு முறையோ ஓர் ஆராய்ச்சி இதழ் இந்த அமைப்பின் சார்பாக வெளியிடப்படுதல் வேண்டும். அத் தகைய ஓர் ஆராய்ச்சி இதழில் அவ்வப்போது செய்யப்படு கின்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரை களையும் பிறவற்றையும் பிரசுரித்தல் வேண்டும். புதுமையா கச் செய்யப்படும் படைப்புக்களையும்கூட அதிலே அறிமுகம் செய்தல் வேண்டும். இவ்வாறு கவிக்கோ பேராசிரியர் அப் துல் றஹ்மான் அவர்கள் கூறிமுடித்தார்கள்.''

துணைவேந்தர், பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் ''கலையும் பண்பும்'' என்ற நூலின் இறுதியில் தெரிவித்துள்ள கருத்து, எம்மை செயலிலிறங்கத்தூண்டும் என்பதில் ஐயமில்லை. அவர் கூறுகிறார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காப்பியங்கள், பிரபந்தங்கள், சமயப் பாடல்கள், உரை நடை நூல்கள் முதலியவற்றை இயற்றி, இஸ்லாமியர் தமிழ் மொழியை வளம்படச் செய்தனர். முஸ்லிம்களே தமது பெரியார்கள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு எத்தகையதெனத் தெரியாதிருக்கின்றனர். எண்ணிறந்த இஸ்லாமியர் தலைசிறந்த தமிழ்ப் புலவர்களாக இருந்திருக்கின்றனர் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். இக்காலத்திலும் பல முஸ்லிம்கள் தமிழ்மொழியைப் பல துறைகளில் பேணி வளர்க்கின்றனர். முஸ்லிம்களின் ஆத்மீக கலாசார வளர்ச்சிக்கு அடிகோலிக் கொடுப்பது தமிழே.''

தமிழ்மொழியைப் பேணி வளர்க்கும் பணியின் ஒரு பகுதியாக இனி, நவீன கால இலக்கியத்தின் திறனாய்வுடனான வரலாறு எழுதப்படுதல் பெரிதும் அவசியமாகின்றது. இதற்கான வேலைகளையும், மதுரைக் காமராஜ் பல்கலைக்கழகமே செய்யலாம் என எதிர்பார்ப்பதைவிட, இஸ்லாமியரின் அமைப்பொன்றே மேற்கொள்ளுதல் நலமாகும். அந்தப் பணிக்கு, எனது இந்தக் கண்ணோட்டம் உதவியாயிருக்க வேண்டும் என்பதே எனது பெரு விருப்பமாகும். இந்த இலக்கிய வளர்ச்சிக் கண்ணோட்டம் எவ்விதத்திலும் பூரணமானதல்ல. இலக்கிய வளர்ச்சியின் சில அம்சங்களையே இந்த முயற்சியில் நான் சுட்டிக்காட்டியுள்ளேன். விரைவிலேயே, சிறந்த வரலாற்றுப் பார்வையிலான நூல்கள் வெளிவர ஆவன செய்வோமாக.

❀ ❀ ❀

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# பேராதனையில் தமிழ் ஆராய்ச்சி

இலங்கையிலுள்ள முதன்மைக் கல்வி நிலையமாகிய பல்கலைக் கழகம் இப்பொழுது ஒரு சிறந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அமைதியற்ற கொழும்பு நகரத்தைவிடப் பல்கலைக்கழகப் படிப்புக்கு உகந்த இடம் பேராதனைதான் என்பதில் ஐயமில்லை. இவ் வீரிடங்களிலுமுள்ள கால நிலையை நோக்குமிடத்து, பேராதனையில் என்றும் தண்மை நிலவுவதையும் கொழும்பு, ஆண்டு முழுவதும் தாங்கொணு வெப்ப நிலையிலிருப்பதையும் காணலாம். படித்துப் பட்டம் பெற விரும்புகிறவரும் ஆழ்ந்த ஆராய்ச்சியில் இறங்கும் நோக்கமுடையவரும் பேராதனையையே விரும்புவர். கல்வித் துறையில் பேர்போன துணைவேந்தர், சர் ஐவர் ஜெனிங்ஸ் இதைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்: பேராதனையில் ஓர் இரவைக் கழித்த ஒருவர், தளர்ச்சித் தன்மையும் விவேக விருத்திக்கு ஒவ்வாத சூழ் நிலையுமுள்ள கொழும்புக்குப் போக எப்படி விரும்ப முடியுமென்று என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாமல் இருக்கிறது. எனவே, ஆராய்ச்சிக்குக் கொழும்பு ஏற்ற இடமல்ல. பேராதனைதான் அதற்குத் தகுந்த இடம் என்பது புலனாகும்.

---

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கம் பேராதனையில் முதன் முதலில் பிரசுரித்த 1952-53ம் ஆண்டுக்கான ''இளங்கதிர்'' ஆசிரியராயிருந்த எஸ். எம். ஹனிபா எழுதிய ஆசிரியத் தலையங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இனித் தமிழ் என்ன நிலையை எய்தும். கொழும்பிலிருந்தது போல், ஆண்டுதோறும் தமிழ்ப் பாடம் படிக்கும் நிலைதான் தொடர்ந்து நடைபெறப் போகிறதா, அன்றி ஆராய்ச்சித் துறையை எட்டிப் பார்க்கும் நிலையாவது அண்மையில் ஏற்படுமா? சென்னைப் பல்கலைக்கழகத்திற் போல், இங்கும் தமிழ் ஆராய்ச்சிக்கென ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு பழங்காலத் தமிழர் சரித்திரம், தமிழ் இலக்கிய வரலாறு போன்றவைகளைப் பற்றி ஆராய்ச்சி ஏன் நடத்தக் கூடாது? இப்படியான ஒரு கேள்வியைக் கேட்பதற்கு இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் பெருமக்கள் உரிமை உடையவர்களே. பேராதனையில் அரசாங்கம் அள்ளிக் கொட்டும் ஆயிரமாயிரக் கணக்கான ரூபாய்களில் ஒரு பகுதியைத் தமிழரும் கொடுத்தனர் என்பதனுல் அல்ல, இன்பத் தமிழ் மொழியும் இலங்கையில் அரசாங்க அலுவல் மொழியாகப் போகின்றது என்ற காரணத்தால்.

சங்க காலத்திலே தோன்றிய தமிழ் இலக்கியங்களைப் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களைப் படிப்பவர் இன்பத்தில் மூழ்குவரென்பது திண்ணம். கருத்துப் பொதிந்த தேன் சுவையாகிய அப் பாடலைப் படித்து நாம் எல்லோரும் மகிழ்ச்சியெய்துகின்றோம். என்றாலும், தனித்தனிப் பாடல்களாக வெவ்வேறு கவிஞர்களால் பாடப்பட்ட அப்பாடல்கள், ஏன் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்ற வெவ்வேறு வரிசையில் தொகுக்கப் பட்டிருக்கின்றன. எட்டுத் தொகை நூல்கள் சங்க காலத்தன என்று சிலர் கூற, வேறு சிலர் அவற்றுள் கலித்தொகை, பரிபாடல் என்பன சங்க காலத்தைச் சேர்ந்த நூல்கள் அல்ல, பிற்காலத்திற்குரியன என்று வாதாடுகின்றார்களே, இதன் உண்மையென்ன என்று இப்படியாக பல ஐயங்கள் இலக்கிய வரலாற்றைப் படிப்பவர்கள் மனத்தில் எழுகின்றன. இவை மாத்திரமா? சங்கத்தைப் பற்றிய வரலாறே புனைந்துரை; அது கட்டுக் கதையேயன்றி வேறல்ல என்று அறிஞர் ஒருவர் சொல்லுகையில் வேறு சிலர் சங்க வரலாறு முற்றிலும் உண்மையென்றும் இன்னுஞ் சிலர் சங்க வரலாற்றில் முதலிரு சங்கத்தைப் பற்றிய செய்திகளை நம்ப முடியாவிட்டாலும், கடைச் சங்கச் செய்திகளை நம்ப முடியும் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகின்றார்கள். இதில் எது உண்மை? அகத்தியர் வட நாட்டிலிருந்து வந்துதான் தமிழ்ப் பயிரை வித்திட்டு வளர்த்தாரா, அன்றி முன்னரே வளர்த்திருந்த அப்பயிருக்கு இலக்கணம் என்ற நீர் வார்த்துச் செழிப்புறச் செய்தாரா? அவருடைய மாணவர் என்று சொல்லப்படுகின்ற தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் இயேசுவுக்கு முந்திய இடைச் சங்கக் காலத்ததா, அன்றி கி.பி. மூன்றும் நூற்றாண்டளவில் தோன்றிய நூலா? இவற்றைப் பற்றி அறிஞர் பலர் கூடி ஆராய்ச்சி செய்த பின்னர்தான் தீர்ப்பான முடிவொன்றைக் காணலாம்.

பண்டைக் காலத்துத் தமிழ் மன்னர் நிறுவியது போன்ற புலவர் கூடும் அவையொன்று இக்காலத்திலும் அமைக்கலாமென்றால், அதற்கு ஆதரவளிக்கக் கூடிய ஒரு வள்ளலை எங்கே தேட முடியும். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம். இது முற்றிலும் உண்மை. ஆனால், இன்று நாம் பாமரராய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மைகெட்டு நாமமது தமிழரென வாழ்ந்து வருகின்றோம். இந்த நிலையில் ஒரு சடையப்ப வள்ளலோ, சீதக்காதியோ தோன்றுவது சாத்தியமல்ல. எனவே, அரசாங்க உதவி பெற்று இயங்கும் பல்கலைக்கழகம் ஒரு வள்ளலாக அமைய முடியும். தமிழர் சரித்திரத்திலுள்ள இருள் சூழ்ந்த பாகங்களை ஒளிபெறச் செய்வதோடு, தமிழ் மொழி வளர்வதற்காக அதிலுள்ள குறைகளை நிவர்த்தி பண்ணி இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்தும் கன்னியாகவே இன்றும் நிலைத்துள்ள எம் இனிய மொழி என்றும் கன்னியாகவே இருக்க வழிவகைகள் செய்ய வேண்டும். ஆறுமுக நாவலர்கள் அநேகர் தோன்றி மொழிப் பணியிலீடுபடுவது மிக மிக அவசியம். ஆனால், இவையெல்லாவற்றிற்கும் மேலாகப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சிப் பிரிவு வெகு விரைவில் தோன்றுவது இன்றியமையாதது; வேண்டற்பாலது.

ஐயந்திரிபறக் கற்பதே கல்வி. தமிழ் படிக்கும் பொழுது ஏற்படும் ஐயமெல்லாம் தெளிவதற்கு ஆராய்ச்சி நடந்தாலன்றி, தமிழ்மொழி இலங்கையில் அரசாங்க அலுவல் மொழிகளுள் ஒன்றாக இருந்து அதைப் படிப்பவர்கள் அதனால் பெரும் பயன் பெறுவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டைக் குடத்தில் நீர் எடுத்தால் என்ன நடக்கும்? சில அரசாங்கக் காரியங்களில் இப்பொழுதும் வழங்கி வருகிற தமிழ்மொழி நிரந்தரமான அரசாங்க அலுவல் மொழியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தமிழ் பிறந்து வளர்ந்த தமிழ் நாட்டிலும் கூட இந்த நிலை இன்னும் ஏற்படாத போது, இலங்கையில் சிறப்பிடம் பெறும் தமிழ், குறைகள் களையப்பட்டதாக இருக்கச் செய்வது இலங்கை வாழ் தமிழறிஞரின் கடன் அல்லவா? ஆதலால் குறைகளை நீக்கி, நிறைவான நிலையுடையதாகத் தமிழை உயர்த்த முயல வேண்டும். அதற்குச் சிறந்த ஆராய்ச்சிதான் அருமருந்தாக அமைய முடியும்.

★ சட்டத்தரணி எஸ். எம். ஹனிபா, பி. ஏ. அவர்கள் இவரைப் பற்றி ''உத்தமர் உவைஸ்'' என்ற நூலெழுதி உயர்வுபடுத்தினர். பாராட்டத் தகுந்த படைப்பாளர் அவர்.

—''வீரகேசரி'' 31.1.1982.

★ பேராசிரியர் எம். எம். உவைஸின் வாழ்க்கை வரலாற்றை ''உத்தமர் உவைஸ்'' என்ற தலைப்பில் சட்டத்தரணி அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா எழுதி வெளியிட்டிருக்கிறார். உத்தமர் என்ற அடைமொழி பேராசிரியர் உவைஸ் அவர்களுக்கு மிகமிகப் பொருத்தமாகும்

—''சிந்தாமணி'' 31.1.1982.

★ உங்களுடைய அமைதியான இலக்கியப் பணியை மதிப்பவன் நான். நீண்ட காலமாக நீங்கள் ஆற்றிவரும் பணி காத்திரமானது...உங்களுடைய தொடர்பு எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது—அ. ஸ. அப்துஸ் ஸமத், B. A- (Hons.)

★ தங்களைத் தேடி நான் வரும்போதெல்லாம், என்னை இன்முகத்துடன் வரவேற்று, உபசரித்து அன்பு வார்த்தைகள் சிந்தி ஊக்குவிக்கும் உங்களை என்னால் என்றும் மறக்க முடியாது.

— மௌலவி எம். எச். எம். புஹாரி (பலாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# நிகரில்லாத அரும்பணி

அமைதியின் உருவத்தை நான் கண்டேன் என்று ஒருவர் சொன்னால், கேட்பவர்கள் எவரும் அதை நம்பப்போவதில்லை. அமைதிக்கு எங்கே உருவம்? அதனால் எப்படித்தான் தோற்றமளிக்க முடியும்? என்ற கேள்விகள் இப்பொழுது இதனை வாசிக்கின்ற உங்களின் மனதில் எழுகின்றன. அதே கேள்விகள்தான், சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்னர், நான் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் மாணவனாக இருக்கும் பொழுது எனது நெஞ்சிலும் எழுந்தன. கல்லூரி ஆண்டுச் சஞ்சிகை ஆசிரியராக நான் பொறுப்பேற்றிருந்தேன். ஆதலால், கல்லூரி அலுவலகத்தில், மாலை நேரங்களில் எனக்கு நிறைய வேலை இருந்தது. 'காலையில் படிப்பு, மாலையில் கல்லூரிக்கான கடமைகள்' என்ற கொள்கைக்கு, நான் அப்பொழுது ஆளாகியிருந்தேன். இப்படிக் கடமைபார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, சில நாட்களில் மாலைவேளை, வெள்ளை 'சூட்' அணிந்து 'டை' இல்லாமல் ஒருவர், கல்லூரி அலுவலகத்தினுள் வருவார்; அதிபரின் அலுவலக வாசலில் சற்றுநேரம் நிற்பார். பின், உள்ளே போய், சில நேரத்தில் கல்லூரி அலுவலகத்தால் மறுபடியும் வெளியே செல்வார்.

---

அல்ஹாஜ் ம. மு. உவைஸ் அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கியதை முன்னிட்டு அவரைப் பாராட்டு முகமாக 1976ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி, கொழும்பு சாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் வெளியிடப்பட்ட மலரில், அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா எழுதிய கட்டுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காட்சியை அடுத்தடுத்துச் சில நாட்களாக நான் கண்டபோதுதான், 'அமைதியின் உருவம் அல்லவா நடந்து செல்கிறது' என்று என்னுள்ளேயே நினைத்துக்கொண்டேன். கல்லூரிச் செயலாளரிடம் ''இவர் யார்?'' என்று, ஒரு நாள் கேட்டேன். ''அவர் தான் உவைஸ்'' என்று அவர் பதில் சொன்னார். நான் திருப்திப்படவில்லை. ''எந்த ஊரைச் சேர்ந்தவர், ஏன் அடிக்கடி இங்கு வருகிறார்'', என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்டு, ''பாணந்துறை ஹேனமுல்லையைச் சேர்ந்த ஜனாப் எம். எம். உவைஸ், பல்கலைக்கழகப் பட்டதாரி, எம். ஏ. பட்டம்பெறப் படித்துக்கொண்டிருப்பவர்'' என்ற விபரங்களைத் தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் ஒரு நாள், அதிபருடன் அவர் கதைத்துக் கொண்டிருக்கும்போது நானும் அதிபரின் அலுவலகத்திற்குள் செல்ல நேர்ந்தது. ''ஹனிபா, இவரை உனக்குத் தெரியுமா?'' என்று அதிபர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் என்னிடம் கேட்டார். ''தெரியாது, ஸேர்'' என்று நான் பதிலளித்தேன். அப்பொழுது, அவர்தான், முதன் முதல் சம்பிரதாயப்படி, ''இலங்கைப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டம்பெற படித்துக்கொண்டிருக்கும் உவைஸ் இவர்தான்'' என்று அறிமுகம் செய்து வைத்தார். அன்று தொடக்கம், ஜனாப் உவைஸுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்த எனக்கு, தமிழ் மொழி ஒரு பாடமாக இருந்ததால், தமிழில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்ததைப் பற்றி, நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். பல சமயங்களில், தமிழ் மொழியின் முக்கியத்துவம் பற்றியும் இலக்கியத்தின் இனிமைகள் பற்றியும் அவருடன் கதைத்தேன்.

பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பின்னரும், தமிழ் மொழியை நான் ஒரு பாடமாக எடுத்ததனால், எம். ஏ. படிப்பில் ஈடுபட்டிருந்த அவர், எனக்குத் தமிழ் சொல்லித் தந்தார். என்னுடன் படித்த மாணவ, மாணவிகளுக்கும் 'டியூட்டோரியல்' வகுப்புக்களில் அவர் தமிழ் இலக்கணம், இலக்கியம் ஆகியன பற்றி எடுத்துக்கூறினார். பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் அப்பொழுது திறம்பட செயலாற்றி வந்தது. அதற்குக் காரணமாய் இருந்தவர், அப்பொழுது தமிழ் விரிவுரையாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த (தற்போதைய தமிழ் பேராசிரியர்) கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள்தான். தமிழ்ச் சங்க நடவடிக்கைகளில் நான் ஊக்கமாக ஈடுபடுவதற்குக் காலாக இருந்தவர், கலாநிதி உவைஸ்தான். நான் தமிழ்ச் சங்கத்தில் ஆர்வமாய் இருந்ததால், தமிழ் பேரறிஞர்களின் நெருங்கிய தொடர்பு கிடைத்தது. தமிழில் எனக்கு முன்பிருந்ததைவிட, கூடிய பற்றும் ஏற்பட்டது.

எனது முதலாவது ஆண்டில், கொழும்பில்தான் பல்கலைக் கழகத்தில் படித்தேன். இரண்டாவது ஆண்டில் மூன்று மாதங்களின் பின்னர், பேராதனைக்கு மாற்றப்பட்டோம். பேராதனையில், மாலை நேரங்களில் அதிகமாக நூல் நிலையத்தில்தான் இருப்பது வழக்கம். விளையாட்டுகளிலும், சங்கக் கூட்டங்கள், நாடகங்கள், முதலியவற்றிலும் ஈடுபடாத நேரங்களில், நூல் நிலையத்தில் ஏதாவது புத்தகங்களைப் படித்துக்கொண்டிருப்பேன்.

ஒரு நாள், நூல் நிலையத்தில் புத்தகங்களைத் தட்டிக் கொண்டுபோன சமயம், தட்டெழுத்தில் அமைந்த பிரதி ஒன்றைக் கண்டேன். எடுத்துக் கொண்டுபோய் இருந்து வாசித்துக்கொண்டிருந்தபொழுது, 'இதிலுள்ள அருமையான செய்திகளைத் தட்டெழுத்துப் பிரதியில் இருந்தால், எத்தனைபேர் தான் அறிவார்கள்; இது ஏன் அச்சில் வரவில்லை' என்ற எண்ணம் என் மனதில் இழையோடிக்கொண்டிருந்தது. 'சரி' இதனை எழுதியவருக்கே கடிதம் எழுதி அறிந்து விடுவோம், என்ற முடிவுக்கு வந்தேன்.

''முஸ்லிம்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு'' என்ற உங்களின் அருமையான படைப்பு, இன்னமும் தட்டெழுத்துப் பிரதியாக இருக்கிறதே, இதற்குக் காரணம் என்ன? ஏன் அச்சிட்டு வெளியிடலாகாது?'' என்று கேட்டு கலாநிதி உவைஸுக்கு அன்றே கடிதம் எழுதினேன். ''ஒருவரும் அச்சிட முன்வரவில்லையே'' என்று பதில் வந்தது. ''நான் அச்சிட்டுப் பிரசுரிக்கலாமா?'' என்று அடுத்த கடிதம் எழுதினேன். ''சரி, செய்யுங்கள். என்னுடைய பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும்'' என்று பதில் தந்தார். நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். கண்டியில் ஒரு அச்சகத்தாரிடம் பேசி, அச்சிடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தேன். பிரசுரிப்பதற்கு ஒரு நிலையம் வேண்டுமே! ''என்ன பெயர் வைக்கலாம்'' என்று ஆலோசனை செய்து கொண்டே இருந்தேன். 'மலர்ச்சி மன்றம்' என்று வைப்ப தாகத் தீர்மானித்து ''இளங்கதிரி''ல் விளம்பரமும் போட்டு விட்டேன். பின்னர், ''மலர்ச்சி மன்றம்'' என்ற பெயர் எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ''ஸர்! வேறு ஒரு பெயர் சொல்லுங்களேன்'' என்று கலாநிதி வித்தியானந்த னிடம் கேட்டேன். ''தமிழ் மன்றம்'' என்று பெயர் வைக் கலாமே என்று அவர் சொன்னார். இப்படியாக, கலாநிதி உவைஸுக்காகவே தமிழ் மன்றம் உதயமானது.

முதலில் கலாநிதி உவைஸின் ஆங்கில நூல், பின்னர் ''இலக்கியத் தென்றல்'', ''தமிழர் சால்பு'' என்று கலாநிதி வித்தியானந்தனின் இரு நூல்கள், 'மலர்ந்த வாழ்வு' என்ற கவிதை நூல் ஆகியன தமிழ் மன்றப் பிரசுரங்களாக வெளி வந்தன. முதலில் வெளியான ஆங்கில நூலைத் தொடர்ந்து, கலாநிதி உவைஸ் எண்ணற்ற நூல்களை எழுதிவிட்டார். எழுத்துத்துறையில் இன்று அவருக்கு ஈடான இலங்கையர் ஒருவரும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு, அவர் முன்னேற்றம் அடைந்துள்ளதைப்பற்றி மகிழ்ச்சியடைபவர் களில் நானும் ஒருவன். ஆனால், மற்றவர்களுடையதைவிட எனது சந்தோஷம் மேலோங்கியுள்ளது. நல்ல காரியத்தை ஆரம்பித்துவைத்து, அந்தக் காரியம் செவ்வனே நடைபெறு வதைக் காணுபவரின் ஆனந்தம், அவையத்தில் மகனை முன்னி ருக்கச் செய்த தந்தையின் உவகையை விடவும் பன்மடங் கானது. அந்த நிலையில்தான், நான் இன்று மகிழ்ச்சியடை கிறேன்.

இஸ்லாமிய இலக்கியம் புத்துயிர் பெறுவதற்கு கலாநிதி உவைஸ் ஆற்றியுள்ள சேவை எவராலும் மறக்க முடியாத தொன்றாகும். அவரின் அரும்பெரும் சேவைக்காக ஒரு 'கலா நிதி'ப் பட்டமலல், மிகப் பல பட்டங்கள் வழங்கப்பட வேண் டும். அவர் முதுமாணிப் பட்டத்திற்காக முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டு பற்றி ஆராய்ந்து இருக்காவிட்டால், இன்று வரை நாம் இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றி அறிந்திருக்க மாட்டோம்.

ஃ ஃ ஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 முஸ்லிம் மக்கள் கீழ் நாட்டுக்கு வந்த வரலாறு

இஸ்லாம் மார்க்கம் அரேபியாவில் தோன்றிய பின்னர் உலகில் பல்வேறு பாகங்களிலும் பரவுவதற்கு முதலில் முஹம் மது நபி (ஸல்) அவர்களும் பிறகு முஸ்லிம் மன்னர்களும் காரணமாயிருந்தனர். முஸ்லிம் மன்னர்களைவிட, ஓரளவிற் காவது அக்காலத்தில் வியாபாரத் துறையிலே பெயர் பெற்றி ருந்த அராபியர்களும் பொறுப்பாயிருந்தனர் என்பது மிகை யாகாது. அக்காலத்தவர் அறிந்திருந்த உலகின் பல பாகங் களிலும் இஸ்லாமிய ஒளி வீசவேண்டுமென்று அவாவினர் அன்றைய முஸ்லிம் மக்கள். அவர்களுக்கு எல்லாம் வல்ல அல்லா(ஹ்) வின் அருளும் அவன் அருளிய திரு வேதமும் துணையாய் இருந்தன. இப்படியான நிலையில் எப்படிப் படிப் படியாக இஸ்லாம் கிழக்கத்திய நாடுகளில் பரவியது என்பதை நாம் அறிய முயல வேண்டும்.

இஸ்லாத்தின் பிரகாசம் கிழக்கில் தோன்றுவதற்கு முன் னர் அரேபியர் கீழ் நாடுகளை அறிந்திருந்தனர். ஈஸா நபி (அலை) பிறப்பதற்கு முன்பு, அதாவது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அரேபியர் கீழ் நாடுகளில் வியா பாரம் செய்தனர், என்பதை ''பெரிபிளஸ்'' போன்ற சரித் திர நூல்களிலிருந்தும், பிற வரலாற்று ஆசிரியர் வழியாகவும்

---

எஸ். எம். ஹனிபா 28–7–1954 ல் இலங்கை வானொலியில் பேசியதன் சுருக்கம், அதேயாண்டு ஒக்ரோபர் 18-ம் திகதி வெளி யான ''இலங்கை வானொலி சஞ்சிகை''யில் கட்டுரையாகப் பிரசுரிக் கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியக்கூடியதாக இருக்கிறது. சைனுவில் கன்ரென் என்ற இடத்திற்குச் சமீபமாய் இஸ்லாத்துக்கு முன்பே அரேபியர் குடியேறியிருந்தனர்.

இந்தியாவின் தென்மேற்குக் கரைக்கும் வியாபாரத்திற்காக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்த அரேபியர்கள், இலங்கைக்கு வந்தனரா இல்லையா என்று திட்டவட்டமாகக் கூற முடியாமலிருக்கிறது. ஆனால் ஏழாம் நூற்றாண்டில் அரேபிய முஸ்லிம்கள் இலங்கைக்கு வியாபாரம் தொடர்பாக நேரில் வந்தனர் என்பதை உறுதியாகக் கூற முடியும். அதுமுதல் இலங்கைக்கும் அரேபியாவுக்கும் வியாபாரத் தொடர்பு தொடர்ந்து இருந்து வந்தது. பத்தாம் நூற்றாண்டு முடிவுக்குள் முஸ்லிம்கள் கொழும்பில் ஒரு பகுதியைத் தாங்கள் குடியிருந்து வியாபாரம் செய்வதற்கென்று அமைத்துக் கொண்டனர். இப்படியாக, இலங்கையில் ஏழாம் நூற்றாண்டில், ஏறக்குறைய கி. பி. 640-ல், முஸ்லிம்கள் குடியேறினர். பத்தாம் நூற்றாண்டுக்குள் இவர்கள் தங்களுக்கென்று ஒரு பகுதியையும் ஏற்படுத்தினர். இதன் பயனாக இலங்கையினது அக்காலத்தைய வியாபாரத்தின் முதுகெலும்பாக இருந்தனர் முஸ்லிம்கள்.

இந்தியாவுக்கும் முஸ்லிம்கள் ஏழாம் நூற்றாண்டில்தான் வரத்தொடங்கினர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நாளிலேயே முஸ்லிம்கள் இப்பகுதிக்கு வந்தனரோ என்பதை திட்டமாகச் சொல்வதற்கில்லை. இரண்டாவது கலீபா உமர் (ரலி) அவர்களின் காலத்தில்தான் இந்து சமுத்திரத்தில் முஸ்லிம்களின் கப்பல்கள் தென்படத் தொடங்கின என்று வரலாற்றாசிரியர் கூறுவர். கி. பி. 637-ல் முஸ்லிம்கள் கடல் மார்க்கமாக வந்து தற்போதைய பம்பாய் நகரத்துக்குப் பக்கத்தே உள்ள தானு என்ற இடத்தைத் தாக்கினர். அதனைத்தொடர்ந்து மேற்குக் கரையில் உள்ள பல துறைமுகங்களைத் தாக்கிக்கொண்டுதான் இருந்தனர். என்றாலும் அவ்விடங்களை கைப்பற்றி ஆட்சி புரியவேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு வரவில்லை.

மேற்கே ஸ்பெயின் தேசத்திலிருந்து கிழக்கே சைனுவுக்கும் வடக்கிலுள்ள மங்கோலியாவரை ஆட்சிபுரிந்த முஸ்லிம்கள் இந்தியாவினுள் ஏன் புகவில்லை என்ற கேள்வி எழுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரசீகத்தைக் கைப்பற்றிவிட்டு கிழக்கே வந்த அவர்களை ஹிந்து குஷ் என்ற மலைத் தொடர் இந்தியாவினுள் வர முடியாமல் தடுத்துவிட்டது. இம்மலைத் தொடருக்கு சற்று வடக்கில் உள்ள சமர்காந், அதற்கும் வடக்கேயுள்ள பொகாரா என்ற இடங்களையும் கைப்பற்றிக் கொண்டு கிழக்கு நோக்கி மொங்கோலியாவரை சென்ற முஸ்லிம்கள், தெற்கு நோக்கி இந்தியாவினுள் வராமல் விட்டதற்கு இயற்கை இடர்தான் காரணம். இந்தியாவுக்கு பிற்காலங்களில் பற்பல அந்நியர் கூட்டங்கள் வந்து குவியக் காரணமாக இருந்த வடமேற்குப் பாதையை அராபியர்களால் திறந்துவிட முடியாமல் போய் விட்டது.

எட்டாம் நூற்றாண்டில்—கி. பி. 712-ல் தான் இந்தியாவின் மீது முதலாவது படையெடுப்பு தொடங்கியது. ஆனால் ஆரம்பப் படையெடுப்பாளர்கள் கடல் மார்க்கமாக வந்து இந்து நதிப் பள்ளத்தாக்குவரை சென்றனரேயொழிய அதற்கு அப்பால் இந்தியாவின் உட் பாகங்களுக்குச் செல்லவில்லை. இப்பகுதியும் இந்தியாவின் மறுபகுதியையும், இடையே இருந்து ஒரு பாலைவனம் பிரித்ததே இதற்குக் காரணமாகலாம். இது தான் இந்தியாவின்மீது அரேபியர்கள் நடத்திய ஒரே தரைப் படையெடுப்பு. இதேகாலத்தில் ஒமய்யாக்கள் ஆட்சியில் நடைபெற்ற இன்னும் இரு சம்பவங்கள் குறிப்பிடத் தக்கன. அவற்றுள் முதலாவது, 710-ல் ஸ்பெயின் தேசம் முழுவதையும் முஸ்லிம்களின் ஆட்சிக்குள்ளாக்கியதாகும். இப்படி மேற்கேயும் எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் சென்று இஸ்லாத்தைப் பரப்பிய முஸ்லிம்கள், 712-ல் தொடங்கி 714-க்குள் ஸமர்காந்திலிருந்து இன்னும் கிழக்கே கஷ்ஹகார் என்ற இடம்வரை இஸ்லாமியக் கொடி பறக்கும்படி செய்தது இரண்டாவது குறிப்பிடத்தக்க சம்பவம். இந்தியப் படையெடுப்புடன் சேர்ந்து, இம்மூன்று சம்பவங்களும் முஸ்லிம்களுக்குள்ளேயே மிகச் சிறந்ததோர் ராஜதந்திரியான அல் ஹஜ்ஜாஜ் என்பவர் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்தன.

அல் ஹஜ்ஜாஜ் சல்டியா என்ற இடத்தில் தேசாதிபதியாக இருந்த பொழுது, தனது இனத்தவரான முஹம்மது இப்னு காஸிம் என்பவரது தலைமையில் கி. பி. 712-ம் ஆண்டு இந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவின்மீது படையெடுக்கும்படி செய்தார். அப்போதைய கலீபா இந்தப் படையெடுப்புக்கு அரைமனத்துடனேயே சம்மதித்தார். இத்தனை தூரத்தில் எத்தனை செலவு செய்து எவ்வளவு உயிர்களைப் பலியாக்கி ஏன் யுத்தம் புரியவேண்டுமென்றுதான் கலீபா தயங்கினார். என்றாலும் அல் ஹஜ்ஜாஜின் ஆசை நிறைவேறியது.

முஹம்மது இப்னு காசிமின் படையெடுப்பைப் பற்றிய வரலாறு சரித்திரத்திலோர் சுவைமிக்க பகுதி. அவர் இந்தியாவின்மீது படையெடுத்த காலத்தில் அவருடைய வயதோ 17. அதுமாத்திரமல்ல, இதுவரை எந்த அரேபியரும் படையெடுத்தே கண்டிராத பூமியில் அவர் அடியெடுத்து வைக்க முனைந்து விட்டார். ஆனால் இதைவிடவும் வியப்பென்னவென்றால் தான் படையெடுத்துச் செல்லும் நாட்டில் வாழ்பவர் படைத்திறம் படைத்தவர்; ஆதியிலிருந்தே நாகரிகத்தில் திளைத்திருந்தவர் என்பதையும் அவருக்குத் தெரியும். இந்த நிலையில் இஸ்லாமிய ஆட்சிபீடத்திலிருந்து எத்தனையோ மைல் தூரத்தில், கடல், மலை பெரும் பாலைவனங்களால் சாதி மதத்தினர், இனத்தவரிடமிருந்து பிரிக்கப்பட்ட ஒரு தனிப் பிராந்தியத்தில் இஸ்லாமிய ஆட்சியை நிலைநிறுத்த இந்த இளைஞர் துணிந்து விட்டார்.

இளமையும், அவருடைய சிறந்த உணர்ச்சியும் அவரிடமிருந்து பயம் என்பதை விலக்கின. ஆதலால், யுத்தத்திற்கான ஆயத்தங்களையெல்லாம் செய்துகொண்டு தனது குறிக்கோளை நிறைவேற்ற அடிகோலினார் இப்னு காஸிம். இந்தப் படையெடுப்பைப் பற்றி கி. பி. 840 அளவில் எழுதிய அல் பலதூரி என்ற வரலாற்று ஆசிரியர் விபரமாய் கூறியுள்ளார். அவர் என்ன எண்ணத்தோடு வெளியேறி வந்தாரோ அதை நிறைவேற்றினார் இப்னு காஸிம். அவரது வெற்றியின் பின்னர் இஸ்லாமிய ஆட்சி வடமேற்கு இந்தியாவில் முதன் முதலாகத் தொடங்கியது.

இந்து நதியின் வடபகுதியில் உள்ள முல்ரான் என்ற இடத்தை முஸ்லிம்கள் கைப்பற்றியதும் அங்கு ஒரு சுவையான சம்பவம் நடைபெற்றது. அப்பகுதியில் உள்ள மக்கள் எல்லோரும் புது ஆட்சியாளரை வரவேற்க ''மணியடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டும், முரசு கொட்டிக்கொண்டும் நடனமாடிக் கொண்டும் வந்தனர். அவர்களை அதுவரை ஆண்டு வந்தவர்களின் கொடுமையைத் தாங்கவொண்ணதிருந்தபடியால்தான் அவர்கள் புது ஆட்சியாளரை அவ்வளவு சிறப்புடன் வரவேற்றனர். இவர்களை இப்னு காஸிம் மிகவும் சிறப்பாக நடத்தினர். அவர்களது கோயில்களைப் பாதுகாத்துக் கொடுத்தார்; மிகவும் எளிதாகவரிகளைக்கட்டுவதற்குவழிவகுத்தார்;இந்தியர்களுக்கே உயர்ந்த உத்தியோகங்களும் கொடுத்தார். தனது உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் ஒரு சிறந்த கட்டளையிட்டார். ''நேர்மையாக நடவுங்கள்'' என்பதே அவரிட்ட சட்டம். மேலும் ''விநியோகிப்பதற்கு உள்ளதைச் சரிசமமாக விநியோகியுங்கள்; வரி விதிக்கும் பொழுது ஒருவரின் தகுதிக்கு ஏற்றவாறு வரிவிதியுங்கள். உங்களுக்குள் சச்சரவுகளை ஏற்படுத்தி நாடு சீர்குலைவதற்குக் காரணமாகாமல் நீங்கள் ஒற்றுமையாயிருங்கள்''. என்று தனது உத்தியோகத்தர்களுக்குச் சொன்னர் இவர்.

இத்தனை சிறப்புடன் ஆட்சி நடத்திய இளைஞருக்கு ஏற்பட்ட முடிவு பரிதாபமானது. இவர் படையெடுத்த காலத்திலிருந்த கலீபா மறைந்து ஒரு புதியவர் அந்த இடத்தில் அமர்ந்திருந்தார். சல்டியத் தேசாதிபதி அல் ஹஜ்ஜாஜும் இறைவனடி சேர்ந்து விட்டார். எனவே இப்னு காஸிமின் நலனைப் பற்றி கலீபாவிடம் எடுத்துக்கூற ஒருவரும் இல்லாத காலத்தில் கலீபாவின் காதில் விழும்படி இவரது நடத்தைகள் பற்றிய கதைகளைக் கட்டிச் சொல்லினர் சிலர். அவசர புத்தியால் தடுமாறிய கலீபாவும் தகாத காரியம் செய்துவிட்டார். வீரன் காஸிம் உலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார். எமக்கு வியப்பை உண்டுபண்ணும் செய்தி ஒன்று இங்கே இருக்கிறது. கலீபாவின் ஆட்சிபீடத்திலிருந்து ஆயிரம் மைலுக்கு அப்பால் இருந்தபடியால் இவ்விளைஞர் கலீபாவின் மரண உத்தரவைத் தடுத்து அதற்கு அடிபணிய மறுப்பதற்கு சந்தர்ப்பம் இருந்தும் தனது உயிரைப் பாராட்டாது தலைவன் உத்தரவுக்குத் தலைசாய்த்து தனது குறுகிய வாழ்வில் காட்டிய அதே அச்சமின்மையைக் காட்டி விட்டார். இந்த வீரச்செயலைக் கண்டு திகைத்தோ என்னவோ அவர்மீது பொய்க் கதைகள் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழி சுமத்தியோர் தாம் வஞ்சம் தீர்ப்பதற்கென்றே அப்படிச் செய்ததாக இப்னு காஸிமின் தியாகத்திற்குப் பிறகு வெளிப் படையாக சொல்லிக் கொண்டார்கள். தனது கோபத்தைத் தணிப்பதற்காகக் கலீபா அவர்களையும் தண்டித்தார்.

அரேபியர்களின் ஆட்சி வடமேற்கு இந்தியாவில் வெகு காலம் நிலைத்திருக்கவில்லை. இப்னு காஸிமினுடைய ஆட்சியின் பின்னர் ஹிந்துவில் தனித்தனி முஸ்லிம் அரசுகள் எழுந்தன. மஸ்ஊதி என்ற யாத்திரிகர் பத்தாம் நூற்றுண்டில் அங்கு வந்தபோது நபிகள் நாயகத்தின் சந்ததியார்களாகிய குறைஷிக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஸிந்து மாகாணத்தின் மேற்பகுதி, கீழ்ப்பகுதி, இரண்டிலும் ஆட்சி புரிவதைக் கண் டார். அவர் வந்த சிறிது காலத்திற்குப் பிறகு இப்னு ஹௌகல் அங்கு வந்தபொழுது முஸ்லிம்களும் ஹிந்துக்களும் மிக ஒற்றுமையாக வாழ்வதை அவதானித்தார். இப்னு காஸி மின் படையெடுப்புக்குப் பிறகு எந்த அரேபியரும் இந்தி யாவை நோக்கிப் படையெடுத்துவரவில்லை. அதன்பிறகு பத்தாம் நூற்றுண்டில் துருக்கியர் படையெடுத்து வந்தனர்.

எட்டாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் வந்த அரேபியர் வருகைக்கும், பத்தாம் நூற்றுண்டின் கடைசியில் ஸபுக்தஜின் என்பவரது முதற்படையெடுப்புடன் தொடங்கிய துருக்கியர் வருகைக்கும் இடையில், படையெடுப்புக்கள் நிகழாதபொழு தும் இந்தியர்க்கும் அராபியர்க்கும் இடையில் தொடர்புகள் அதிகரித்து வந்தன. பல யாத்திரிகர்கள் அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்குமாய் வந்து சென்றுகொண்டிருந்தனர். அர சர் தம் பிரதிநிதிகளை இங்குமங்கும் அனுப்பினர். இந்திய வைத்தியர் பலர் பாக்தாத்துக்குச் சென்றனர். இப்படியாக கலாசார, வணிக தொடர்புகள் வட இந்தியாவுடன் மாத்திர மல்லாமல் தென்னிந்திய ராஜ்யங்களுடனும் ஏற்பட்டன. குறிப் பாக மத்திய இந்தியாவின் மேற்குக் கரையில் ஆண்ட ராஷ்ட்ர கூத்தர் என்போர் வணிகத் தொடர்பை ஏற்படுத்திக்கொண் டனர். இப்படி, இஸ்லாத்தைப் பற்றி இந்தியர் அறிய வாய்ப்பு ஏற்பட்டது. காலஞ் செல்லச்செல்ல மதத்தைப் பரப்பும் நோக்கத்துடன் பலர் வந்தனர். பள்ளிகள் பல கட் டப்பட்டன. முஸ்லிம்களும் இந்துக்களும் ஒரு சச்சரவுமின்றி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

ஃ ஃ ஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# கல்ஹின்ன

— பேராசிரியர் அல்ஹாஜ்
டாக்டர் எம். எம். உவைஸ்

மலை, மலைசார்ந்த இடம் குறிஞ்சி எனப்படும். குறிஞ்சி நிலத்து மக்கள் பற்றிய வருணனைகளைச் சங்க இலக்கிய நூல்களிலே காணலாம். பண்டைய இலக்கியத்தில் காணப்பட்ட குறிஞ்சி நிலத்தில் போக்குவரத்து வசதிகள் இல்லை. அத்தகைய மக்களுக்கு நெடுந்தூரம் போகவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. ஆனால் இன்றோ நிலைமை மாறிவிட்டது. குறிஞ்சி நிலமாகக் கொள்ளக்கூடிய மலைப்பாங்கான பிரதேசங்களில் நிறையத் தெருக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள குறிஞ்சி நிலப்பிரதேசம் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை.

இன்றைக்கு ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் குறிஞ்சி நிலக் கிராமம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து வளைந்து நெளிந்து செல்லும் பாதைகள் ஊடாகச் செல்ல வேண்டி இருந்தது. பாதையில் செல்லும் பொழுது எட்டிப் பார்த்தாலே நெஞ்சு திடுக்கிடும் செங்குத்தான மலைகளினூடாக பாதைகள் சென்றுகொண்டிருந்தன. இத்தகைய தெருக்களில் போவது,புதிதாக அத்தகைய பிரதேசங்களின் ஊடாகச் செல்லும் எம்போன்றவர்களுக்கு அபாயகரமானதொன்றாகத் தோன்றினாலும் அப்பிரதேச மக்கள் அதற்குப் பழக்கப்பட்டு சர்வ சாதாரணமாக அத்தெருக்களைப் பயன்படுத்துவர். இத்தகைய செங்குத்தான பாறைகளில் அமைந்துள்ள தெருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கமாகச் சென்று கல்ஹின்னைக் கிராமத்தை அடைந்தோம்.

அன்று அந்த ஊர் ஒரு கிராமத்துக்குரிய சிறப்பியல்புகள் அனைத்தையும் கொண்டு விளங்கியது. அந்தக் கிராமத்தில் முஸ்லிம்களே மிகப் பெரும்பான்மையோர் ஆவர். அங்குள்ளவர்கள் கல்வி கற்றுத் தேர்ந்து பட்டதாரிகளாகவும், வைத்தியர்களாகவும், ஆசிரியர்களாகவும், அரசு ஊழியர்களாகவும் விளங்குகின்றனர். அத்தோடு தலைசிறந்த எழுத்தாளர்களையும், ஆற்றல் மிக்க கவிஞர்களையும் நாணயமுள்ள வணிக மக்களையும் தோற்றுவித்த பெருமை கல்ஹின்னைக்கு உண்டு.

எனக்கும் கல்ஹின்னைக்கும் தொடர்பு ஏற்படக் காரணமாயிருந்தவர் அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா அவர்களாவார். அவர் கல்ஹின்னையில் ஒரு தமிழ் மன்றத்தை ஆரம்பித்தார்; தமிழ் வளர்த்தார். எனது முதல் நூலான 'முஸ்லிம்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு' (Muslim Contribution to Tamil Literature) என்னும் ஆங்கில நூலைத் தமது செலவிலே வெளியிட்டார். இந்த நூலுக்குத்தான் எனக்கு முதுமாணி (M.A.) பட்டம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஏட்டு வடிவில் இருந்த எனது இந்த நூலை அன்று பெரும்புள்ளிகளாக இருந்தவர்கள் பாராட்டியதோடு நின்றுவிட்டனர். அவலை நினைத்து உரலை இடித்தனர். விளம்பரங்கள் பெற்று சஞ்சிகைபோன்று வெளியிடலாம் என்று ஆலோசனை கூறினர். இந்த மாற்றுந்தாய் மனப்பான்மைக்கு என்மீது அத்தகையோர் கொண்ட பொறாமைதான் காரணமாக இருந்திருக்கலாம் என்று எனக்கு இப்பொழுதுதான் ஞானம் பிறந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்தான் அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா அவர்கள் எனது ஆங்கில நூலைத் துணிந்து வெளியிட்டார்.

எனது முதல் தமிழ் நூல் 'இஸ்லாமியத் தென்றல்'. இதனை வெளியிட்ட பெருமையும் ஒரு கல்ஹின்னைப் பெருமகனையே சாரும். அவர்தான் கல்ஹின்னையைப் பிறப்பிடமாகக்கொண்ட கவிஞர் எம். ஸி. எம். சுபைர் அவர்கள். அவர் இப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்ஹின்னை அளித்த முன்மாதிரி ஆசிரியர் திலகமாக விளங்கு கின்றார்.

கல்ஹின்ன எஸ். எம். ஹனிபா அவர்களின் மற்றொரு சாதனை அதே தமிழ் மன்றம் மூலமாக யாழ்ப்பாணத் தமிழ் அறிஞர் பெருந்தகை ஒருவரின் தமிழ் நூல் ஒன்றினையும் வெளியிட்டமையாகும். அவ்வறிஞர் தான் இப்பொழுது யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் திகழ்பவரும் அப்பொழுது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சிரேட்ட தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவருமாகிய பேராசிரியர் கலா நிதி சு. வித்தியானந்தன் அவர்கள். அப்பெரியாருடைய முதல் நூலான 'இலக்கியத் தென்றல்' என்னும் தமிழ் நூலை வெளியிட்ட பெருமையும் கல்ஹின்னை எஸ். எம். ஹனிபா ஹாஜியாரையே சாரும்.

கல்ஹின்னையின் மற்றொரு சேவையையும் ஈண்டு குறிப் பிட விரும்புகிறேன். இத்தகைய ஓர் ஏட்டில் இந்நிகழ்ச்சி பதிவாகத் தவறினால் எதிர்காலச் சந்ததியினர் அதனை மறந்தே விடுவர். நான் அப்பொழுது பரீட்சைத் திணைக்களத்திலிருந்து விலகி, இலங்கை வணிகர் மன்றத்தில் (Ceylon Chamber of Commerce) சேர்ந்து சில நாட்களே சென்றிருந்தன. இலங்கை யில் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் முஸ்லிம் மாணவரின் தமிழ் இலக்கிய விடைத் தாள்களை முஸ் லிம் ஆசிரியர்களே புள்ளியிடும் வாய்ப்பைப் பெறுமுகமாக இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங் கள், தமிழ் இலக்கியத்துக்கான பாடநூல்களாக இடம் பெறு தல் வேண்டும் என்பதை வலியுறுத்தி, நான் தயாரித்த முறை யீட்டு மனுவுக்கு முதலில் கையொப்பம் இட்டவர் கல்ஹின்ன எஸ். எம். ஹனிபா ஹாஜியார் அவர்களே ஆவர். அம்முறை யீட்டு மனுவில் கையொப்பமிட்ட மூவருள், மற்றைய இருவர் அறபுப் பயிற்சிச் சங்கச் செயலாளரான மௌலவி ஏ.எல்.எம். பளீல் அவர்களும், இஸ்லாமிய ஆராய்ச்சி மஜ்லிஸின் செய லாளரான மௌலவி எம். ஜே. எம். றியால் (அறபு வட்டாரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அதிகாரி) அவர்களுமாவர். அப்பொழுது பரீட்சை ஆணையாளராகக் கடமை ஆற்றியவர் திருவாளர் எஸ். ஈ.ஆர். பேரின்பநாயகம் அவர்கள். அப்பொழுது கௌரவ கல்வி அமைச்சராக இருந்தார் அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள். கல்வி அதிகாரியாக இருந்தவர் அல்ஹாஜ் எம். பி. நூர்தீன் அவர்கள். இந்த முறையீட்டு மனுவின் பெறுபேறுதான், இன்று கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சைக்கு அமைந்துள்ள தமிழ் இலக்கியம் 'ஆ' பாடத்திட்டம்.

இவ்வாறு பார்க்கும்பொழுது ஈழத்து இஸ்லாமிய மறுமலர்ச்சிக்குப் பறைசாற்றுமல் அரும்பணி புரிந்த பெருமக்களைத் தோற்றுவித்த பெருமை கல்ஹின்ன கிராமத்துக்குச் சாரும். இந்தப் பணி தொடர எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா நல்லருள் பாலிப்பானாக. ஆமீன் ஆமீன், யாறப்பல் ஆலமீன்.

ஃ ஃ ஃ


# தமிழ் மன்றம் நூல்கள்

கிடைக்குமிடங்கள் :

## பர்வீன் டிரேடர்ஸ்

116-1/0, குமார வீதி,
கொழும்பு-11.

## ஹாதி புக் டிப்போ

79, தெமட்டகொட ரோட்,
கொழும்பு-9.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு
தி. க.
கொழும்பு

# உத்தமர் உவைஸ்

கலாநிதி அ. சண்முகதாஸ் Ph.D.

கல்ஹின்ன தமிழ் மன்றம் காலத்துக்குக் காலம் நல்ல பணியாற்றி வருகின்றது. சட்டத்தரணி அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா எழுதிய உத்தமர் உவைஸ் என்னும் நூல் அத் தமிழ் மன்ற வெளியீடாக இவ்வருடம் பங்குனி மாதம் வெளிவந்துள்ளது. இது ஒரு சரிதை நூலாகும். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலே இஸ்லாமிய இலக்கியப் பேராசிரியராக விளங்கும் டாக்டர் அல்ஹாஜ் ம. மு. உவைஸ் அவர்களுடைய சரிதை பற்றி இந்நூல் கூறுகின்றது. நாம் இந்த உலகிலே வாழ்கின்ற, வாழ்ந்த ஒவ்வொரு மனிதனுடைய சரிதையையும் அறியவோ எழுதவோ எண்ணுவதில்லை. ஒரு சிலருடைய சரிதைகளையே அறிய அல்லது எழுத முயற்சிக்கிறோம். ஏனெனில் அச்சிலர் இவ்வுலகத்தில் வாழும் பலருக்கு சிறந்த முன்மாதிரிகளாக அமைந்த காரணத்தாலேயாகும். பேராசிரியர் உவைஸ் அவர்களுடைய சரிதை எழுதப்படுவதற்கு அவர் எவ்வாறு ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைந்தார் என்பது பற்றி உத்தமர் உவைஸ் நூலாசிரியர், ''அல்ஹாஜ் கலாநிதி ம. மு. உவைஸ் அவர்களின் 'முஸ்லிம் தமிழ்த் தொண்டு' பற்றிய ஆங்கில நூல் என்னை பெரிதும் கவர்ந்ததற்குக் காரணம், அதுபோன்ற நூலொன்று என்றுமே அச்சில் வெளிவராதிருந்ததாகும். முதன் முதலில் தட்டெழுத்துப் பிரதியாக நான் அதைக் கண்டு, முழுவதையும்

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழி, பண்பாட்டுத் துறைத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் எழுதிய நூல் விமர்சனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் ஒலிபரப்பாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்து முடித்த பின்னர், அவ்வளவு சிறந்த முயற்சி, அச்சில் வெளிவரவேண்டுமென விரும்பினேன். அதற்கான செயலிலும் இறங்கினேன்; வெற்றி கண்டேன். அதன் பயனுல் பற்பல ஆண்டுக் காலம் மங்கிக் கிடந்த தமிழ் இலக்கிய நூல்களில், இஸ்லாமியரின் படைப்புகள் இருட்டு அலமாரிகளிலிருந்து வெளிவரத் தொடங்கின. மிகச் சிறந்த இஸ்லாமிய இலக்கியங்களை அறிமுகம் செய்துவைத்து, நல்ல முன்மாதிரிகாட்டியுள்ள ஒருவர், இன்னமும் இலக்கிய உலகுக்கு ஓரளவேனும் அறிமுகமாக்கப் படாமலிருந்தது பற்றிக் கவலையடைந்து, செயலில் இறங்கிய தன் பயனே இந்நூல்'' என்று கூறுகிறுர். தான் எழுத எடுத்துக்கொண்ட விடயத்தின் தேவை, பொருத்தப்பாடு ஆகியனவற்றை உணர்ந்தே நூலாசிரியர் ஜனுப் எஸ். எம். ஹனிபா எழுத முற்பட்டிருக்கிறுர் என்பதற்கு அவருடைய கூற்று சான்றுகின்றது.

சரிதை நூல் எழுதுவதற்குச் சில விசேட உத்திகள் கையாளப்பட வேண்டியது அவசியமாகும். வாசகர்கள் தாம் யாருடைய சரிதையை நூல் முழுவதிலும் வாசிக்கப்போகின்றுர்களோ அச்சரிதையினை அவர்கள் ஆர்வத்துடன் வாசிப்பதற்கு அவரைப் பற்றிய சிறப்பான தகவல்களை வாசகர்களுக்கு முதலிலேயே முன்வைக்க வேண்டும். இதே உத்தியையே உத்தமர் உவைஸ் ஆசிரியர் ஜனுப் எஸ். எம். ஹனிபாவும் கையாளுகின்றுர். நூலின் முதல் அத்தியாயம் தொடங்குவதற்கு முன்னர் ''உவைஸ் யார்'' என்றெரு பகுதியினை அமைத்துள்ளார். அப்பகுதியிலே அமைந்துள்ள முதலாவது பந்தி உவைஸ் என்றெரு பெரிய மனிதரை எம் மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திவிடுகிறது.

''அறிவும் ஆற்றலும் இணைந்து செயல்படுவதனுல், வாழ்க்கையில் எவரும் முன்னுக்கு வரலாமென்பதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்குபவர், பேராசிரியர் கலாநிதி அல்ஹாஜ் முஹம்மது உவைஸ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதுடன் நின்றுவிடாமல், தொடர்ந்தும் அறிவுத்துறையில் நெடுங்காலம் ஈடுபட்டதன் விளைவாக, இன்று அவர் மதுரையில் காமராஜ் பல்கலைக்கழக இஸ்லாமிய இலக்கியப் பகுதியில் பேராசிரியராகக் கடமையாற்றுகிறுர். இந்தியாவில், இதற்கு முன்னர் கல்விக்காகப் பணிபுரிவதற்கு வாய்ப்புக்கிட்டிய விபுலானந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளை அடுத்து, கலாநிதி உவைஸ் மதுரை சென்றதிலிருந்து, இரண்டாவது விபுலானந்தர் என்ற பெயரையும் பெற்றுள்ளார். தற்பொழுது இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராயுள்ள திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களே இதைச் சுட்டிக்காட்டிப் பெருமிதப்பட்டுள்ளாரென்றால், இலக்கிய உலகம் எத்துணைப் பெருமையடைதல் வேண்டும்? இலங்கையின் தற்காலப் புலமைத்துவத்திற்குக் காட்டப்பட்டுள்ள பெருமதிப்புத்தான் உவைஸ் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த கௌரவம் என்பதில் ஐயமில்லை''.

கல்வி, அறிவு, தன்னுணர்வு ஆகியனவற்றை மதிப்பவர்கள் எவருமே இப்பந்தியினைப் படித்தவுடன் உவைஸ் ஒரு மதிப்புள்ள, புலமை மிக்க, எம் நாட்டின் புகழ் பரப்புகின்ற ஓர் அறிஞர் என்பதை உடனடியாக இனங்காணுவதுடன் அவர் பற்றிய சரிதையினை அறிய ஆவலுடையவர்களாக ஆவார்கள். இலங்கையிலிருந்து சென்று தமிழ் நாட்டிலே பேராசிரியராகக் கடமையாற்றி எமது நாட்டுக்குப் புகழ் தேடித் தந்தவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தராகும். அதற்குப் பின்னர் கலாநிதி உவைஸ்தான் அப்பணி தலைமேற் கொண்டு தமிழ்நாடு சென்றுள்ளார். அதனால்தான் அவரை ''இரண்டாவது விபுலானந்தர்'' என்று திரு. அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதை ஆசிரியர் இங்கு பொருத்தமாக எடுத்துக் கையாண்டுள்ளார்.

சரிதை கூறுகின்ற ஆசிரியர், இடையிடையே நூலின் நாயகனையே தன் சரிதை கூறும்படி வைத்துள்ளார். ''பரம இரகசியம்'' என்னும் இந்நூலின் ஆறாவது அத்தியாயம் அத்தகைய உத்தி முறையிலேயே எழுதப்பட்டுள்ளது.

சரிதை எழுதுபவர்கள், தான் வரலாறு எழுதுபவர்கள் குறைகளை விடுத்து, நல்லவற்றையே எழுதுவார்கள் என்பதனால், அச்சரிதையோ வரலாறோ முழுமையடைவதில்லை எனக் கூறப்படுவதுண்டு. ஜனாப் எஸ். எம். ஹனிபா அக்குற்றத்துக்கு ஆளாகாமலே நூலை எழுதியுள்ளார். ''உணவுப்பழக்கம்'' எனும் அத்தியாயத்தை சான்றாகக் காட்டலாம்.

மொத்தத்தில், ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழும் ஓர் அறிஞரை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளும்படி சிறந்த முறையிலே இலகுவான சுவையான, தமிழ் நடையிலே எழுதப்பட்ட நூல்தான் உத்தமர் உவைஸ் என்னும் சரிதை நூல்.

9-6-1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITHDRAWN
PUBLIC LIBRARY

- You have brought out a very nice book on Dr. Uwise. It is well documented and covers many aspects of his life and his varied activities.

Prof. Dr. S. VITHIANANTHAN
*Vice Chancellor*
*University of Jaffna.*

- I would like to congratulate Mr. Haniffa for his literary achievement which is, indeed, no mean feat.

His Excellency Rogelio de la Rosa
*Ambassador for the Philippines*
*in Sri Lanka.*

- I am glad to note that you are publishing a book on Islamic Tamil literature. It will be definitely useful to University and G. C. E. (A/L) Students who read history of Tamil literature.

Dr. A. SANMUGADAS
*Head of the Dept. of*
*Languages and Civilization*
*University of Jaffna.*

- Mr. Haniffa has been in journalism for over four decades. His work as an author will remain lasting contributions to learning.

THE SUNDAY TIMES 24. 5. 1981

---

Printed at FAIRPRINT 65, Prince's Gate, Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org